# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மார்ச் 2002 ஜீவியம் 7 மலர் 11**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *யோக வாழ்க்கை விளக்கம் IV* | **2** |
| *லைப் டிவைன்* | **10** |
| *இம்மாதச் செய்தி* | **16** |
| *சாவித்ரி* | **17** |
| *லைப் டிவைன் - கருத்து* | **19** |
| *அன்பர் கடிதம்* | **21** |
| *சிறு குறிப்புகள்* | **23** |
| Nov. 17th, 1973 | **26** |
| *வாழ்வின் மறுமொழி* | **30** |
| Pride & Prejudice | **32** |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | **55** |
| *உண்மை முழுமையில் இருக்கிறது, பகுதியில் இல்லை* | **60** |

❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

## யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

### 686) ஜீவனற்ற செயலில் அருளைக் கண்டால் செயல் உயிர் பெறுகிறது. தரித்திரத்தில் அருளைக் கண்டால் அருள் பேரருளாகிறது.

*ஜீவனற்ற செயலுக்கு ஜீவனைத் தரும் அருள் தரித்திரத்தை பேரருளாக்கும்.*

ஒரு தச்சன் கடமைக்காக ஒரு மணி நேரத்தில் செய்ய வேண்டிய வேலையை இரண்டு மணி நேரமாகச் செய்வதை நாம் கண்டால், எரிச்சல் வருகிறது. ஏன் இறைவன் இந்தத் தச்சனில் இதுபோல் செயல்படுகிறான் என்று நினைத்தால் பதில் தெரிவதில்லை. தச்சனுடைய கண்ணோட்டத்தில் இதைக் காண முயலலாம். இறைவன் கண்ணோட்டத்தில் இதைப் புரிந்து கொள்ள முயன்றால் அருள் வெளிப்படும். தச்சனை ஏன் இதுபோல் வேலை செய்கிறாய் என்று விசாரித்தால் அவன் காலையில் சாப்பிடவில்லை, வீட்டில் சண்டை போட்டுவிட்டு வேலைக்குப் போகாமலிருக்கலாம் என நினைத்தவன் மனம் மாறி வேலைக்கு வந்திருக்கிறான் என்று தெரிந்ததும், எப்படி இந்த அளவு அந்த மனநிலையில் பசியுடன் வேலை செய்ய முடிகிறது என்று நமக்குத் தோன்றும். மேலும் விசாரித்தால் இந்த முதலாளி எப்பொழுது வேலை செய்தாலும் 40 நாள் வேலையில் 30 நாள் கூலி கொடுத்துவிட்டு மீதி பாக்கி வைப்பார். பிறகு அது வாராது என்றும் தெரியும். நானாக இருந்தால் நீ செய்வதில் பாதியும் செய்யமாட்டேன். நீ நல்ல மனிதனாகத் தெரிகிறது என்று சொல்லத் தோன்றும். இறைவன் கண்ணோட்டத்தில் இத்தச்சனுடைய ஆன்மா போன ஜென்மத்தில் சுமுகமான குடும்பத்தில் பிறந்து, இந்த ஜன்மத்தில் சண்டை சச்சரவு எப்படியிருக்கும் என அனுபவிக்கும் இக்குடும்பத்தில் பிறந்து சச்சரவின் ஆன்மீகத் தன்மையை வேலையில் காண முனைகிறது



என்றறிந்தால், அக்கண்ணோட்டத்தில் தச்சனின் மனப்போராட்டம் ஆன்மீக அனுபவமாகத் தெரியும். அதுவே அருளின் செயல். நம் பார்வை தச்சனை மாற்றி சுறுசுறுப்பாக்கும். சூழல் மாறும். செயல் உயிர் பெறும்.

பரம தரித்திரனை இக்கண்ணோட்டத்தில் காண ஆன்மீக சூட்சுமப் பார்வை (Spiritual subtle vision) வேண்டும். அதுபோல் கவனித்தால் தரித்திரத்தின் பூர்வோத்திரம் நமக்கு விளங்கும். நமக்கு விளங்குவதால் நம் மூலம் அருள் தரித்திரனைத் தொடும். தரித்திரன் தனி நபர். தரித்திரம் பொது (impersonal vibration). அருளால் தனிநபர் (personal) குணம் (impersonal) பொது குணமாக மாறினால், தரித்திரத்திற்கு பிரபஞ்சத்தில் முடிவு காலம் வந்துவிடும். இனி தரித்திரம் உலகை விட்டுப் போகத் தயாராகும். அன்னையின் உடலைத் தீண்டிய எந்தக் குணமும் திருவுருமாற்றமடைந்து தன் நிலை கரைந்து எதிரானதாக மாறுகிறது. தரித்திரம் அருளின் தீண்டலால் சுபீட்சமாகிறது. இது திருவுருமாற்றம். இதை அருள் செய்வதில்லை. அருள் கர்மத்தைக் கரைக்கும். திருவுருமாற்றத்தைக் கொணர்வது பேரருள் super grace. நம் பார்வையால் புறநிலை மாறும். நம் பார்வை மாறினால் ஜடமும் திருவுருமாறி சச்சிதானந்தமாகும் என்கிறார் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

❊ ❊ ❊

### 687) ஆன்மாவுக்கு அருளை அடையாளம் தெரியும் என்பதால், அருள் புரியும் நேரம் ஆன்மா வெளிப்படும் நேரம். வெளிவரும் ஆன்மா சைத்தியப் புருஷன். ஜீவாத்மாவால் மேலே வர முடியாது.

*அருள் செயல்படும் நேரம் ஆன்மா வெளிப்படும் நேரம்.*

சட்டம் எந்த நேரமும் அமுலிலிருக்கிறது. ஆனால் நாம் அதைச் செயலில் சில சமயங்களில் தான் பார்க்கிறோம். ஊரில் அராஜகம்

தலை எடுப்பதை போலீஸ் அடக்கும்பொழுது சட்டம் செயல்படுவதை நாம் பார்க்கிறோம். நம் நிம்மதியான நாகரீகமான வாழ்வு ஆயிரம் சட்டங்கள் அமுலில் இருப்பதால். ஏதாவது ஒரு சட்டம் அமுலிலில்லை எனில் அராஜகம் தலை விரித்தாடுவதை உடனே காணலாம். எந்த பஸ் எந்த ரூட்டில் எத்தனை மணிக்குப் புறப்பட்டுப் போக வேண்டும் என சட்டமும், உத்தரவும் உண்டு. நாளை காலை அந்த உத்தரவு அமுலில் இல்லை எனில் பஸ் ஸ்டாண்ட் எப்படியிருக்கும் என நினைக்கவே பயமாக இருக்கிறது. அதேபோல் அருள்தான் உலகைத் தாங்கிப் பிடிக்கிறது. நமக்கு அது தெரிவதில்லை. அருள் ஒரு நிமிஷம் செயல்படாவிட்டால் உலகம் தவிடு பொடியாகும் என்கிறார் அன்னை.

பொதுவான அருள் அனைத்துச் செயலையும் ஆதரித்தாலும் அருளுக்குக் குறிப்பான செயலும் உண்டு. அருள் செயல்படும் பொழுது ஆன்மா வெளிப்பட்டு அதை ஏற்றுக் கொள்கிறது. ஆன்மா (சைத்தியப் புருஷன்) செயல்பட்டால், செயல்பட்டு மேலெழுந்து வந்தால், அருள் செயல்படும். MLA, MP நம் ஜில்லா தலைநகருக்கு வந்தால் அவர்கள் கலெக்டரைக் போய்ப் பார்ப்பார்கள். மந்திரி வந்தால் கலெக்டர் பங்களாவில் தங்கி, கலெக்டரைக் கூப்பிட்டனுப்புவார். அல்லது கலெக்டர் போய்ப் பார்ப்பார். முதன் மந்திரி வந்தால், கலெக்டர் அவர் நுழையும்பொழுது வெளியே வந்து வரவேற்பார். கவர்னர் வந்தால், ஜில்லா எல்லைக்குப் போய் கலெக்டர் அவரை வரவேற்று உடனிருந்து ஜில்லாவை விட்டு வெளியே போகும்வரை எல்லையைக் கடக்கும்வரை இருப்பார். அதேபோல் எண்ணத்தை மனம் ஏற்கிறது. செயலை உடல் ஏற்கிறது. அருள் வந்தால் சைத்தியப் புருஷன் எனும் ஆன்மா உள்மனமாகிய தன்னிடத்திலிருந்து மேல் மனத்திற்கு வந்து அருளை வரவேற்கிறது.

ஜீவாத்மா அசைவதில்லை. அது வெளிவருவதில்லை. அதுவே அருளை உற்பத்தி செய்யவும் வல்லது. அதை grace of the spirit ஜீவனின் அருள் என்கிறார் பகவான். அது மேல் மனத்திற்கு வருவதில்லை. அருளுக்காகக் காத்திருப்பதில்லை. அசைவற்ற, அழிவற்ற, வளர்ச்சியோ, மாற்றமோ இல்லாதது ஜீவாத்மா. சைத்திய புருஷன் உள் மனத்தில் உள்ளது. இது ஜீவாத்மாவின் பிரதிநிதி,



இதற்கு வளர்ச்சியுண்டு, மாற்றமுண்டு. வாழ்வின் அனுபவசாரத்தை சேர்த்து அதனால் வளர்வது சைத்திய புருஷன். அடுத்த பிறவியை நிர்ணயிப்பது சைத்திய புருஷன். அங்கும் தொடர்ந்து வருவது இதுவேயாகும்.

❋ ❋ ❋

**688) ஆன்மா இயற்கையில் வெளிவருவது ஆண்டவன் செயல். மனிதனுடைய ஆன்மா மேலே வருவது பரிணாம முயற்சி. அது நன்றியறிதல், பரிணாம முயற்சியை மேற்கொண்ட மனிதனுடைய ஆன்மா பரிணாம முயற்சியை மேற்கொண்ட இறைவனின் ஆன்மாவைக் கண்டு கொள்ளுதல், நன்றியறிதலாகும்.**

***ஜீவன் ஜீவாத்மாவை அறிதல் நன்றியறிதலாகும்.***

நாம் இயல்பாக செயல்படும்பொழுது உடலால் செயல்படுகிறோம். ஒரு நேரம் உணர்ச்சியால் செயல்படுகிறோம். ஏதோ ஒரு சமயம் அறிவால் செயல்படுகிறோம். இதுவே மனித நிலை. உயிர் பிரிவதற்கு முன் ஆன்மா மேலே வந்து இவ்வாழ்வை நினைவுபடுத்தி, அடுத்த பிறவிக்குள்ள இடத்தை முடிவு செய்து மீண்டும் உள்ளே போகிறது. அது தவிர அன்றாட வாழ்வில் ஆன்மா வெளிவருவதில்லை. தபஸ்விக்கு தியானத்தில், சமாதியில், பக்தனுக்கு லயத்தில் ஆன்மா மேலெழும்! தவமுயற்சியால் ஆன்மா தபஸ்விக்குத்தான் மேலே வரும்.

பூரண யோகம் என்பது அழிவும், வளர்ச்சியும், மாற்றமுமில்லாத ஆன்மா மாறி, வளர்வதாகும். (Yoga of spiritual evolution) சமர்ப்பணத்தால் ஒவ்வொரு செயலையும் ஆன்மாவுடன் ஈடுபடுத்துவதால், ஆன்மா செயலை ஏற்று வளர ஆரம்பிக்கிறது. இந்த ஆன்மா சாட்சிப் புருஷனான ஜீவாத்மா அன்று, சைத்தியப் புருஷனான பிரகிருதியிலுள்ள வளரும் ஆன்மா. பரம்பரையாக இறைவன் அழிவற்றவன், மாற்றமற்றவன் என அறிவோம். பகவான் இறைவனுக்கு மாற்றமும், வளர்ச்சியும் உண்டு என்கிறார்.

மாற்றத்தையும், அதன் மூலம் வளர்ச்சியையும் இறைவன் ஏற்று லீலையை மேற்கொண்டு, அதனால் (bliss) பேரானந்தத்தைவிட உயர்ந்ததான (delight) சிருஷ்டியின் ஆனந்தத்தை நாடுகிறான் என்று பகவான் லீலையை வர்ணிக்கின்றார்.

குழந்தையிடம் பொம்மை, சட்டை கொடுத்தால் வாங்கிக் கொள்ளும். மகனுக்குத் தொழிலுக்கு முதல் கொடுத்தால், தகப்பனார் அம்முதலை எழுப்பிய வகைகளை மகன் அறிவான். எவ்வளவு சேமிப்பு, நிலத்துக்கடன் எவ்வளவு, நகை விற்றது எவ்வளவு என அறிவதால் பொம்மை பெறும் குழந்தையைவிட விவரமாக மகன் தந்தையின் முயற்சியைப் பாராட்டுகிறான். மோட்டார் பைக் வாங்கப் போனால் மார்க்கெட்டில் விற்கிறது வாங்கிக் கொள்கிறான். 1940, 1950இல் இளைஞர்களாக இருந்தவர்கள் நம் நாட்டில் குண்டூசியும் உற்பத்தியாகவில்லை என மனம் புழுங்கியவர்கள், நாட்டில் மோட்டார்பைக் வந்தால் அதை நாட்டு முன்னேற்றமாக, சர்க்கார் முயற்சியாக, சமூக வளர்ச்சியாக அறிந்து மகிழ்வார்கள். தன் வளர்ச்சியை அறிபவனே, நாட்டு வளர்ச்சியை அறிய முடியும். நம் ஆன்மா வளர முயன்றால், மனிதன் விழிப்புடனிருப்பான். அவன் கண்ணுக்குத்தான் இறைவனுடைய ஆன்மா - பிரபஞ்சத்தின் ஆத்மா - வளர்வது தெரியும். அதைத் தெரிந்து உணர்ந்து மகிழ்வதே நன்றியறிதலாகும்.

வளரும் ஆன்மா மேலே எழுந்து வந்தால் வெளியில் நிகழும் நிகழ்ச்சிகளை, இறைவன் செயலாக, இறைவனின் ஆன்மா வளர முயலும் வெளிப்பாடாகக் காண முடியும். அந்த உணர்வு நன்றியறிதலாகும். அது எழுந்தால் உடல் புளகாங்கிதமடையும்.

❋ ❋ ❋

**689) மனிதனுடைய ஆன்மா பிரபஞ்சம் முழுவதும் பரவ முயல்வது நன்றியறிதல் எனப்படும்.**

***ஜீவாத்மா பிரபஞ்ச ஆத்மாவாவது இறைவனுக்கு நன்றியறிதலாகும்.***



நன்றியறிதல் எனில் பெரியது சிறியதற்குக் கடமையில்லாத நேரத்தில் தானே முன்வந்து உவந்து செய்யும் உதவி அல்லது சேவையின் உண்மையை உளமார அறிந்து உணர்வால் ஏற்று மலர்வதாகும்.

அவனருளன்றி அவன் தாள் வணங்க முடியாது என்பதுபோல், பரமாத்மாவின் அருளின்றி ஜீவாத்மா அவனை அடைய முடியாது. ஜீவாத்மா, பரமாத்மாவை அடையும் முன் இடைப்பட்ட நிலையான பிரபஞ்சத்தின் ஆத்மா ஆக வேண்டும். இதை எய்தத் தடையாக இருப்பது ஜீவாத்மா மீது கரையாகப் படிந்து கடலாகச் சூழ்ந்துள்ள அகங்காரம் எனப்படும் ஆணவ மலமாகும். அகங்காரம் அழிந்தால் ஆன்மாவாகிய சைத்தியப் புருஷன் விடுதலை பெற்று வெளிவருவான். சைத்தியப் புருஷனுக்கு பிரபஞ்சத்தைத் தழுவும் வீச்சுண்டு. பிரபஞ்சம் முழுவதும் பரவ முயலும் ஆன்மா சிறைப்பட்ட தன் சிறுகூடான அகந்தையிலிருந்து விடுபட்டு, தன் பிறப்பிடமான பரமாத்மாவை அடைய முன் நிலையான பிரபஞ்சத்தின் ஆத்மாவோடு கலக்க முயல்கிறது. இது ஜீவாத்மாவின் முயற்சியால் மட்டும் முடியாது. இதைப் பூர்த்தி செய்ய பரமாத்மாவின் அனுக்கிரஹம் தேவை. பரமாத்மா அனுக்கிரஹித்ததை அறிந்து உணர்வது நன்றி உணர்வாகும்.

சைத்தியப் புருஷன் வெளிப்படுமுன் பிராணமயப் புருஷன் வெளிப்படுகிறான். ஆசையால் பிராணமயப் புருஷன் சிறைப் பட்டிருக்கிறான். இச்சிறை விலகி பிராணமயப் புருஷன் வெளிப்படுகிறான். இது யோகத்தில் ஒரு கட்டம். இந்நிலை விடுதலையாகும். ஆசையினின்று பெற்ற விடுதலையாகும். அகந்தையினின்று விடுதலை பெற்றால் எழுவதும் உணர்வே. அவ்வுணர்வுக்கு நன்றியறிதல் எனப் பெயர்.

அதற்கு முன் நிலை ஆசையடங்கியிருப்பது. ஆசையை அடக்க முடியாதவன் தன் ஆசை பூர்த்தியாவதன் மூலம் அழிகிறான். அடக்க முடிந்தவன் கட்டுப்பாடுடையவன். கட்டுப்பாட்டில் வாழ்வில் முன்னேறுகிறான்.

ஆசை எழுவதற்கு முன் நிலை உணர்வற்ற உழைப்பு. இந்த உழைப்பு உடல் உழைப்பு. ஆயுள் பரியந்தம் உழைத்தாலும் கடைசி காலத்திற்கு எதுவும் மீதியில்லாத உழைப்பு.

உழைப்பின் அடுத்த கட்ட ஆசை எழுந்து தன்னைக் கட்டுப்படுத்தி வாழ்வை உயர்த்தி, பின் ஆசையெனும் சிறையிலிருந்து பிராணமயப் புருஷனை விடுவித்து, அதன் பலனாக அகந்தை எனும் கூட்டை உடைத்து சைத்தியப் புருஷனை வெளிப்படுத்தினால், அது பிரபஞ்சம் முழுவதும் நன்றியறிதலாகப் பரவுகிறது.

❋ ❋ ❋

**690) பிரபஞ்சம் மனிதனில் குவிந்து சேருவது கருணையாகும்.**

*பிரபஞ்சம் கருணையால் ஜீவாத்மாவாகிறது.*

அருள், கருணை, அனுதாபம், பரிதாபம் ஆகியவற்றை அன்னை பிரித்துக் காட்டியிருக்கிறார். நம்மால் பொறுக்கமுடியாமல் பரிதாபப்படுகிறோம். வேண்டியவர் வேதனை அனுதாபம் தருகிறது. எவரும் துன்பப்படக் கூடாது என்பது கருணை, துன்பம் இருக்கக் கூடாது என்பது அருள் என்பது அன்னை விளக்கம்.

துன்பம் என்பதை ஆன்மீகரீதியில் ஆண்டவனை விட்டு விலகியிருப்பது என்பார்கள். ஆண்டவனை அடைவது இன்பம், அவரைவிட்டுப் பிரிந்துள்ளது துன்பம் என்பது தத்துவம். பிரபஞ்சம் இறைவனிலிருந்து பிரிந்து வந்து செயல்படுகிறது. இது மீண்டும் ஆண்டவனையடைய வழியுண்டா? வழியிருந்தால் பிரபஞ்சம் இன்பம் பெறும். இதைச் சாதிப்பது கருணை. பிரபஞ்சம் மீண்டும் இறைவனை அடைய தன்னுள் செறிந்த புள்ளிகளை (dense points) ஏற்படுத்துகிறது. அவை ஆன்மாக்களாகும். அந்த ஆன்மாவைச் சுற்றி மனித ஜீவன் எழுகிறான்.



இறைவனிலிருந்து பிரிந்து துன்பநிலையில் உள்ள பிரபஞ்சத்தின் துன்பம் அழிய கருணை செயல்பட்டு, மீண்டும் பிரபஞ்சம் இறைவனையடைய, தன்னுள் பல்லாயிரம் செறிந்த புள்ளிகளாக ஆன்மாக்களை உற்பத்தி செய்து, அவ்வான்மாக்களைச் சுற்றி ஜீவன்களை எழுப்புகிறது. இச்செயல் கருணையால் நடந்ததாகும்.

செறிந்த புள்ளிகளான ஆன்மா முதல் நிலை வளர்ச்சியைப் பெற தன்னைச் சுற்றி அரண் அமைத்து அதனுள் வளர்கிறது. தான் பெற வேண்டிய அனுபவங்களை எல்லாம் பெற்று, வளர்ச்சி முடிந்த நிலையில் தன்னைச் சுற்றி ஆதரவாக முதலிலமைந்த அரண், இன்று சிறையாகிவிட்டதை அறிந்து, அரணைத் தகர்க்கும் வழியை நாடுகிறது. அரண் தகர்ந்தால் ஆன்மாவுக்கு விடுதலையுண்டு. அரணான அகந்தையிலிருந்து விடுதலை பெற்ற ஆன்மா, தன் பிறப்பிடமான பரமாத்மாவையோ, அது உறையும் சச்சிதானந்தத்தையோ, அதற்கு முன்னுள்ள பிரம்மத்தையோ நாட விரும்பினால் ஆன்மா மோட்சப் பாதையைத் தேர்ந்தெடுக்கிறது என்று பொருள். மோட்சத்தைத் தேடும் ஆன்மா மோட்சம் பெறும். தான் பெற்ற விடுதலை கனிந்திருந்தால், மோட்சம் உடனே கிட்டும். கனியாவிட்டால், கனியும்வரை உலகில் ஜீவன் முக்தனாக வாழ வேண்டும்.

மோட்சப் பாதையை நாடாமல், பூரணயோகக் குறிக்கோளான சத்திய ஜீவனை நாடினால் விடுதலை பெற்ற ஆன்மா பிரபஞ்சம் முழுவதும் பரவி, பிரபஞ்சத்தின் ஆத்மாவாகி, அந்நிலை முதிர்ந்த பின், பரமாத்மாவை எட்டித் தொட்டு, சத்திய ஜீவிய உலகில் வந்து, தன்னை சத்திய ஜீவனாகத் திருவுருமாற்றம் செய்து கொள்கிறது. இதன் முதற்படி பிரபஞ்சம் மனிதனில் குவிந்து சேருவது. எனவே இது கருணையாகும்.

❋ ❋ ❋

*...தொடரும்*

# லைப் டிவைன்

கர்மயோகி

## X. Conscious Force

*Page No. 85*
*Para No. 13*

**Materialism speaks of extension of consciousness.**
**To them, it is a material phenomenon.**
**They are inseparable from our physical organs.**
**It is their result.**
**It is not their utiliser.**
**This is an orthodox contention.**
**Knowledge is increasing like a tide.**
**This does not hold against new knowledge.**
**Orthodox view explains more and more.**
**These explanations are less adequate.**
**They strain more and more to explain.**
**We now see a greater truth.**
**Our total consciousness has a capacity.**
**Our parts of the body and being have a capacity.**
**Our organs, senses, nerves and the brain are there.**
**One exceeds the other.**
**Do these organs generate those capacities?**
**These organs are only their habitual instruments.**
**They do not generate those capacities.**
**Consciousness uses the brain.**



## 10. சித் - சக்தி

**ஜீவியம் பரந்து விரிகிறது என நாத்திக வாதம் கூறுகிறது.**
**அது ஜடமான நிகழ்ச்சி என்கிறார்கள் அவர்கள்.**
**நம் உறுப்புகளினின்று பிரிக்க முடியாதவை என்கின்றனர்.**
**இது அதனுடைய பலன்.**
**அவற்றைப் பயன்படுத்துவது இது இல்லை.**
**இது சம்பிரதாயமான வாதம்.**
**அறிவு அலைகள் பெருகுகின்றன.**
**ஆனால் புது ஞானத்தை இது தடை செய்யாது.**
**சம்பிரதாயம் மேலும் மேலும் பேசுகிறது.**
**ஆனால் விளக்கம் போதாது.**
**விளக்கம் எழுவது சிரமமாக இருக்கிறது.**
**ஒரு பேருண்மை தெரிகிறது.**
**நம் ஜீவியத்திற்குத் திறனுண்டு.**
**நம் உடலுறுப்புகட்கும், ஜீவனுக்கும் திறனுண்டு.**
**உறுப்புகள், புலன்கள், நாடி, நரம்பு, மூளை அவ்வுறுப்புகளாகும்.**
**இவற்றைக் கடந்தது ஜீவியத்தின் திறன்.**
**இவ்வுறுப்புகள் அத்திறன்களை உற்பத்தி செய்கின்றனவா?**
**உடலுறுப்புகள் பழக்கத்திலுள்ள கருவிகளாகும்.**
**அவற்றால் திறனை உருவாக்க முடியாது.**
**ஜீவியம் மூளையைப் பயன்படுத்துகிறது.**

**The upward strivings of the brain do not produce the consciousness.**
**Brain has not produced consciousness.**
**Nor does the brain use the consciousness.**
**Consciousness produces the brain for its use.**
**We see this in abnormal instances.**
**They prove our organs are dispensable.**
**The heartbeat is not absolutely essential for life.**
**Breathing too is not essential to life.**
**The organised brain cells are not necessary to thought.**
**An engine is constructed.**
**There is its motive power of steam or electricity.**
**The engine does not cause the steam.**
**Nor does it explain it.**
**Similarly, our physical organism does not explain thought.**
**Nor does it explain consciousness.**
**The force is anterior.**
**Not the physical instrument.**

**Page No. 86**
**Para No. 14**

**Momentous logical questions follow.**
**We see inertia and inanimation.**
**Mental consciousness exists there.**
**If so, what about material objects?**
**Is there a mind present there?**
**Would it be universal subconscious mind?**
**Is it incapacitated to act?**
**Is it unable to communicate itself to the surface?**
**Can we say, it is due to want of organs?**



**மூளையின் ஆர்வமான எழுச்சி ஜீவியத்தை உற்பத்தி செய்வதில்லை.**
**மூளை ஜீவியத்தை உற்பத்தி செய்யவில்லை.**
**மூளை ஜீவியத்தைக் கருவியாகப் பயன்படுத்துவதுமில்லை.**
**ஜீவியம் தன் வேலைக்காக மூளையை உற்பத்தி செய்தது.**
**அரிதான நேரத்தில் நாம் இதைக் காண்கிறோம்.**
**நம் உறுப்புகள் இன்றிமையாதவையில்லை என அவை அறிவுறுத்துகின்றன.**
**இதயத்துடிப்பு உயிருக்கு இன்றியமையாததில்லை.**
**மூச்சும் உயிருக்குத் தேவையில்லை.**
**வளர்ந்த மூளைச் செல்கள் சிந்திக்கத் தேவையில்லை.**
**ஒரு என்ஜினைச் செய்கிறோம்.**
**அதை ஓட்டும் நீராவி அல்லது மின்சாரமுள்ளது.**
**நீராவியை என்ஜின் உற்பத்தி செய்யாது.**
**என்ஜின் நீராவி எப்படி வந்தது எனவும் கூறாது.**
**அதேபோல் நம் உடலுறுப்பு எண்ணம் எழுந்த வகையை அறியாது.**
**அவை ஜீவியத்தையும் அறியா.**
**சக்தி முந்தையது.**
**உறுப்பன்று.**

**பெரிய பிரச்சினைகள் எழுகின்றன.**
**ஜீவனற்ற தமஸைக் காண்கிறோம்.**
**அவற்றுள் மனத்தின் ஜீவியம் காணப்படுகின்றது.**
**அது உண்மையெனில், ஜடப்பொருளைப் பற்றி என்ன சொல்வது?**
**அவற்றுள் மனம் உண்டா?**
**அது பிரபஞ்சத்தின் ஆழ் மனமாகுமா?**
**அதனால் செயல்பட முடியாதா?**
**அதனால் மேல் மனத்துடன் பேச முடியாதா?**
**உறுப்பில்லாததால் முடியாது என்று சொல்லலாமா?**

**What about the material state?**
**Is it empty of consciousness?**
**Or, does consciousness sleep there?**
**What is it from the point of view of evolution?**
**It is an original sleep.**
**It is not an intermediate sleep.**
**What is sleep?**
**Let us learn from the human example.**
**Sleep is not a suspension of consciousness.**
**It is a gathering inward away from response.**
**At least from conscious physical response.**
**The impact of external things does not evoke responses.**
**There is existence with no means of communication.**
**They have not yet developed those means for outward communication.**
**The world is external and physical.**
**Existence needs communication with this world.**
**Their position is this inability.**
**Much of existence sleeps.**
**Does something awake in them?**
**Is it conscious?**
**Is it Purusha or Soul?**

**...contd.**

❊ ❊ ❊.



**ஜடத்தின் நிலையைப் பற்றி என்ன சொல்வது?**
**அதற்கு ஜீவியமில்லையா?**
**அல்லது அங்கு ஜீவியம் துயிலுறுகிறதா?**
**பரிணாமப் பார்வையில் அது என்ன?**
**அது அடிப்படையில் உறக்கம்.**
**அது அரைத் தூக்கமன்று.**
**தூக்கம் என்பது என்ன?**
**மனித உதாரணத்திலிருந்து நாம் அறிய முயல்வோம்.**
**தூக்கத்தில் ஜீவியம் நின்று போகவில்லை.**
**செயலிலிருந்து விலகிச் சேர்ந்து ஒதுங்குவதாகும்.**
**பதில் பேசும் நிலையினின்று விலகுவது தெரிகிறது.**
**புற நிகழ்ச்சிகளின் மோதல் அதைச் செயல்படுத்துவதில்லை.**
**பேசும் திறனற்று வாழ்வுள்ளது.**
**புறத் தொடர்பை ஏற்கும் திறனை அவை இதுவரை பெறவில்லை.**
**உலகம் என்பது புறம், ஜடம்.**
**வாழ்வுக்கு இதன் தொடர்பு அவசியம்.**
**திறனற்ற நிலையே அதன் உண்மை நிலை.**
**வாழ்வு தூக்க மயக்கத்திலுள்ளது.**
**அதனுள் விழிப்பானதுண்டா?**
**அது ஜீவனுள்ளதா?**
**அது புருஷனா? ஆத்மாவா?**

**...தொடரும்**

❊ ❊ ❊

# இம்மாதச் செய்தி

- மெய் சொல்வது உயர்ந்தது.
- பொய் சொல்லாமலிருப்பது உயர்ந்ததை விடக் கடினமானது.

பொய் சொல்ல முடியாதவனுடைய மெய் பிரம்ம சத்தியம் - பிரம்மமே சத்தியமாவது.

"The Truth of one incapable of falsehood, is the Truth of Brahman".

❊ ❊ ❊

**ஜீவிய மணி**

அகந்தையின் சக்தி அனந்தனில் பிறக்கிறது.





## P. 17. Or hew the ways of Immortality

**அமரத்துவமான சுவர்க்கத்திற்கு பாதை அமைப்போம்**

காயகல்பம், சாகா வரம், மரணமிலாப் பெருவாழ்வு, அமரவாழ்வு என்பவற்றை மனிதன் சாகாமல் என்றும் உடலில் உயிரோடிருப்பான் எனக் கொண்டு இந்திய தவசிகளும், ரிஷிகளும் காயகல்பம் தேடினர்.

வேதம் அமரத்துவம் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

- அமரத்துவம் ஆத்மாவுக்கு, உடலுக்கோ, உயிருக்கோ (ஆவி)இல்லை.
- அமரத்துவத்தின் இரு அம்சங்கள் infinity அனந்தம், Universality பிரபஞ்சம் முழுவதும் பரவுவது.
- அனந்தம் எல்லா நிலைகட்கும் உண்டு. ஜடம், வாழ்வு முதல் சத் வரை அனந்தம் உண்டு. ஆனால் அமரத்துவம் Supreme infinityக்கே உரியது. Supreme என்பதை 'பர' என்று குறிப்பதுண்டு.
- Universality பிரபஞ்சம் முழுவதும் பரவுதலும் எல்லா நிலைகட்கும் உண்டு. அமரத்துவம் Divine Universality -க்கேயுண்டு.
- ஆன்மா இவையிரண்டையும் - (Supreme infinity, divine universality) உச்சகட்ட அனந்தமும், இறைவனுக்குரிய பிரபஞ்ச ரூபமும் - பெற்றால் அமரத்துவம் பெறுகிறது என்பது வேதம்.

சாவித்திரி கூறும் அமரத்துவம் உடலில் வாழும் மனிதனுக்குரியது, உலகுக்குப் புதிய கருத்து. சாவித்திரி எமனை வென்று, அழித்து மரணத்தை அழித்து உலகுக்கு அமரத்துவம் வழங்க வந்தவள். அதைச் சாதித்தாள்.

இப்பக்கத்திலுள்ள மற்ற கருத்துகள்.

- எமனெனும் கருமேகத்துடன் போரிட வந்தவள் சாவித்திரி.
- மரணம், வீழ்ச்சி, சோகம் ஆன்மாவை நோக்கி உந்தும்.
- ஆயுதம் தாங்கிய அமரத்துவம் காலத்தின் கிடுக்கிப் பிடியைச் சமாளித்தது.
- ஜடத்தின் இருளில் வாழ்வின் சிறு போராட்டம்.
- தம் வலுவே எதிர்ப்புக்கு அளவுகோல்.
- தெய்வீக அம்சங்களைத் தாக்கினாள்.
- ஆர்வம் நிறைந்த மனித இதயத்திற்கு அவளிதயம் துணை நின்றது.
- விதியின் திரையில் விளையாடும் உருவம்.
- தெய்வீக விளையாட்டின் வெற்றியும், தோல்வியும்.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனப்பான்மை (mentality) என்பது பொது; நல்லதாகவும் இருக்கலாம் அல்லது கெட்டதாகவுமிருக்கலாம். கெட்ட எண்ணம் என்பது கெட்டது. பார்க்கப் போனால் இரண்டும் ஒரே தன்மையை உடையவை. நிலை வேறு. பிறர் நலன் கருதும் இனிமையும் (benevolence), கெட்ட எண்ணமும் ஒரே அளவுகோலின் இரு முனைகள். மனப்பான்மை அக்கோலின் மையமாகும்.

*நல்லெண்ணமும் கெட்ட எண்ணமும் மனத்தின் இரு முனைகள்*





## P. 16. Shrinking distances

### பெரிய உலகம் சுருங்கி இடமும், காலமும் மறைகிறது

ஜடமும் ஆன்மாவும் ஒன்று என்பதே இந்த இரண்டாம் அத்தியாயம். அதன் கடைசிப் பாராவில், உலகம் சுருங்குகிறது. சுருங்கும் உலகம் இடம், காலத்தை அழிக்கும் எனக் கம்பியில்லாத் தந்தியை உதாரணமாகக் கூறி, ரேடியோவைக் குறிப்பிடுகிறார். ரேடியோ ரிசீவர், டிரான்ஸ்மீட்டர் அழியும் நேரம் வரும். அதன்பின் உள்ள ஒரே தடை அகந்தை என்றால், அகந்தை அழிந்தால்,

**உலகம் ஒன்று என்பது நிரூபணமாகும்**

என்று முடிக்கிறார். உலகம் ஒன்று என்றால், ஜடமும், ஆன்மாவும் வேறு வேறு ஆகாததன்றோ? சுருங்கும் உலகம் என்பதை விளக்கத் தேவையில்லை.

- மனிதனை மனிதனிடமிருந்து பிரித்தது தூரம்.
- நடந்து போய் தூரத்தை முதலில் மனிதன் வென்றான்.
- குதிரைச் சவாரி நடப்பதைவிட வேகமானது.
- பிறகு சைக்கிள் வந்தது. தொடர்ந்து காரும், ரயிலும், விமானமும் வந்தன.
- தூரம் சுருங்குகிறது. அதனுடன் காலமும் சுருங்குகிறது.
- பூமி மட்டுமன்று, சூரிய மண்டலமும் சுருங்குகிறது.
- ஒளி ஒரு செகண்டில் உலகை 7 தரம் சுற்றி வருவதை அதிகபட்ச வேகமாகக் கருதிய உலகில் அதையும் 300 மடங்கு வேகப்படுத்தலாம் எனவும் கண்டுள்ளனர்.
- தபால், தந்தி, போன், e-mail செய்தியைத் துரிதப்படுத்தி விட்டது.

- டெலிபதி என்பது ஒருவர் மனத்தை அடுத்தவர் அறிவது, ஒரு சிலருக்கு இத்திறமையுள்ளது.
- எல்லாப் பொருள்களும், எல்லா ஜீவராசிகளும் அணுக்களால் ஆனவை என்பதும் உலகம் ஒன்று என்று கூறுகிறது.
- மனித சுபாவம் எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் ஒன்றாகவே இருப்பதை சரித்திரம் கூறுகிறது.
- உடலுறுப்புகள் மனிதனுக்கும், விலங்குகட்கும், மீன் போன்ற ஜந்துகட்கும் ஒன்றுபோல் செயல்படுவதை விஞ்ஞானம் கூறுகிறது.
- உலகம் பல வகைகளிலும் ஒன்று என்றறிய போதுமான அறிவும், செய்திகளும் உள்ளன. நாம் ஏற்பது நம்மைப் பொருத்தது.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நிகழ்கால நினைவு, சந்தோஷத்தை அளிக்கும். கடந்த காலத்தையோ, எதிர்காலத்தையோ நினைப்பது ஏமாற்றம் தரும். ஏமாற்றங்களெல்லாம் சந்தோஷத்தை உற்பத்தி செய்பவை. கட்டுப்பாட்டிற்குரிய கல்லூரிப் படிப்பு, பட்டத்தில் முடியும். ஆஸ்பத்திரி வாழ்வு உடல்நலத்தைத் தரும். சிறந்த எதிர் காலத்திற்காக அவற்றைப் பொறுத்துக் கொள்ளலாம். அதற்கு அடுத்த நிலையுண்டு. படிப்பில் ஊன்றி நிலைத்து அளவு கடந்த சந்தோஷத்தைக் காணலாம். ஆப்பரேஷனுக்கு பின் படும் வேதனையில் அதே சந்தோஷத்தைக் காண்பது முடியாது. எனினும் அங்கும் அஃது உண்டு. துரோகத்தால் வதையும் மனிதன், துரோகியின் கண்ணோட்டத்தில் பிரச்சினையை அறிய முயன்றால் துரோகத்திலும், துரோக மனப்பான்மையிலும் அதே பெருஞ்சந்தோஷத்தைக் காண முடியும்.

*துரோகத்தின் தூய்மை.*



## அன்பர் கடிதம்

**ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய**

அன்னை அன்பர்களுக்கு நான் அன்னையின்பால் எப்படி ஈர்க்கப்பட்டேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடலூரில் புத்தகம் வெளியிடும் (பயிற்சி புத்தகங்கள்) நிறுவனம் நடத்தி வருகிறேன். வியாபாரம் சுமாராக நடைபெற்றது. விற்ற புத்தகத்திற்குப் பணம் collection மந்தமாக வந்து கொண்டிருந்தது. அவ்வமயம் அன்னை அன்பர் எனக்கு அறிமுகமானார். அவர் மூலம் அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும், பாண்டி ஆசிரமத்தையும் பற்றி அவரிடம் விளக்கமாகக் கேட்டறிந்தேன். முதல் தடவையாக அவருடன் ஆசிரமம் சென்றேன். மலர் அஞ்சலி செய்து வணங்கிவிட்டு வந்தேன். புத்தகம் மாறுதல் அடைவதாக அறிந்து, அதற்கு அன்னை அன்பரை வழி கேட்டேன். புத்தகத்தைத் தூசி இல்லாமல் துடைத்து, ஒழுங்காக அடுக்கி வை என்றார். அதன்படி செய்தேன். அவர் கூறியபடி எல்லாப் புத்தகங்களயும் விற்றுவிட்டேன். அங்கும் அன்னை செயல்பட்டார். பிறகு வீட்டிலும், அலுவலகத்திலும் அன்னையின் படங்களை வைத்துத் தினமும், பூக்களை வைத்து, ஊதுபத்தி கொளுத்துவது என முறையாகச் செய்து வருகிறேன். அதிலிருந்து மற்ற தெய்வங்களைக் காட்டிலும் அன்னையை என் மனதில் நிலை நிறுத்தி அனுதினமும் வணங்கி வருகிறேன்.

அவருடைய தரிசன நாட்களில் பாண்டி செல்வதை வழக்கமாகிக் கொண்டுள்ளேன். ஸ்ரீ அன்னை அவர்கள் என் வாழ்க்கையில் 26-6-2001ல் மிகப் பெரிய பேரானந்தத்தை அளித்தார்.

நான் அன்றைய தினம் சென்னையில் பிரிண்டிங் செய்த புத்தகங்களை delivery எடுக்கச் சென்றிருந்தேன். புத்தகங்களை

லாரியில் ஏற்றிக் கொண்டோம். லாரி பிடிக்காததால் மேலும் ஒரு வேன் மூலம் புத்தகங்களை ஏற்றி தார்பாய் போட்டுக் கட்டிக் கொண்டு சென்னையில் புறப்படும் போது மணி இரவு 11.00. சற்று தூரல் போட ஆரம்பித்துவிட்டது. மவுண்ட் ரோடு வரும்போது பிடித்த மழை தாம்பரம்வரை நீடித்தது. நான் அன்னையை அழைத்த வண்ணம் உள்ளேன். புத்தகத்தை அன்னையிடம் சமர்ப்பணம் செய்துவிட்டேன். உன் விருப்பம் எதுவோ அப்படியே நடக்கட்டும் என்று அன்னையிடம் கூறிவிட்டேன். தாம்பரம் வந்ததும் வேனை நிறுத்தி மேலே ஏறி பார்த்தால் குட்டையாகத் தண்ணீர் தேங்கி நிற்கிறது. என் நண்பர் அதை வாரி இறைக்கிறார். லாரியும் எங்களைக் கடந்து செல்கிறது. அதை பின் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறோம். மழை விட்டு விட்டுப் பெய்கிறது. அன்னையைத் தவிர எனக்கு வேறு நினைவு வரவில்லை. அதிகாலை 4.30 மணிக்கு வீட்டிற்கு வந்து சேர்ந்தோம்.

லாரியிலும், வேனிலும் ஏறி தார்பாயைப் பிரித்து பார்த்த போது என் உள்ளம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரு புத்தகம் கூட நனையவில்லை. நாங்கள் அடுக்கி ஏற்றிய புத்தகம் அப்படியே இருந்தது. நனைந்திருந்தால் 10 இலட்சம் நட்டம் வந்திருக்கும். எனக்குப் 10 பைசா கூட நட்டம் இல்லாமல் ஸ்ரீ அன்னை அவர்கள் புத்தகத்தை அவ்வளவு பாதுகாப்பாகக் கொண்டு வந்து என்னிடம் சேர்ந்தார்கள் என்பதை எண்ணும் போது மனம் பேரானந்தம் அடைகிறது. இன்று நினைத்தாலும் உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. அன்னை அவர்கள் என் கண்முன் நிகழ்த்திய இந்நிகழ்ச்சியைக் காணும்போது அன்னை என்னுடன் எப்போதும் இருக்கிறார் என்று நம்புகிறேன்.

*ஸ்ரீ அன்னையே என் தெய்வம்.*

❊ ❊ ❊





## ‘மனைவியை வென்ற கணவன்’

அதிகம் படித்த கணவன் அன்னையிடம் வந்தபொழுது காரிருளாக இருந்த வாழ்வு இருள் குறைந்து நிலம் தெளிந்து புத்துயிர், புத்துணர்ச்சி வந்தாலும், நிலம் தெளிந்த பின் பொழுது விடியும் என்ற நம்பிக்கையின்றித் தவிதவித்தான். பொழுது விடியப் போகிறது என்பது யாருக்குத் தெரிந்தாலும் தனக்குத் தெரியவில்லை. மனம் அந்த இடத்தில் கை விடுகிறது.

படிப்பின் சிறப்போடு, நம்பிக்கையுமிருந்ததால், அன்னையை அதிகமாக ஏற்றுக் கொள்ள முயன்ற பொழுது விடிந்தது. பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்று சுதந்திரமாக வாழ்வு அமைந்தது. வாழ்வு சில ஆண்டுகட்கு முன் இருந்ததை நினைத்துப் பார்க்க முடியவில்லை. இன்று அளவுகடந்து மாறிவிட்டது. எல்லாம் Mother's grace என்ற வாயால் கூறாமல், மனதால் கூற முடிகிறது.

உடனுள்ளவர் இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்றெல்லாம் கூறினாலும் மனம் எதையும் நாடவில்லை. எல்லாம் கூடி வந்த பின் என்ன இருக்கிறது தேடுவதற்கு!

### இவர் வாழ்வில் பெரிய குறை

குறை பெரிதானாலும் உலகம் அறியாதது, வீடு அறியும். இவர் மனைவி பிரபலமானவள். அவளுக்கு நண்பர்கள் அதிகம். ஆபீசில் **A1** என்று பெயர் வாங்கியவர். எவராலும் முடியாததை இவள் செய்வாள் எனப் பெயர் வாங்கியவள். இவளுக்கு ஒரு நல்ல குணம். கணவனைக் குறை கூறுவாள். பிறரெதிரில் அடக்கமான இந்தியப் பெண் எனப் பெயர் வாங்கிவிட்டாள். இது போன்ற மனைவி கிடைக்க நீ புண்ணியம் செய்தவன் என்று எல்லோரும் அவள்

எதிரிலேயே சொல்லும்படி நடப்பதால், இவளைப் பற்றி எவரிடமும் குறை கூறி மனம் சமாதானமடைய முடியாது.

**அன்னை அருளால் குடும்பக் கஷ்டம் ஒவ்வொன்றாக விலகும்பொழுது மனைவியின் சின்னத்தனம் படிப்படியாய் கடுமையாகிறது.**

மனைவி தன் ஆதிக்கத்தை கணவனிடமிருந்து அவனுடைய உறவினர்களுக்கும் நீட்டிவிட்டாள் அன்னையால் வீடு அற்புதமாக இருக்கும்பொழுது, மனைவி முக்கியமான நேரத்தில் கணவனைக் குறை சொல்லுவதும், குத்தலாகப் பேசுவதும், மனத்தைப் புண்படுத்துவதும், அன்னை மீதுள்ள நம்பிக்கையே போவதுபோல் அமைகிறது. கணவன் மனம்,

- ஏன் என் மனைவி இப்படியிருக்கிறாள்?
- எல்லோரிடமும் நடப்பதைப்போல் என்னிடமும் இருக்கக்கூடாதா?
- நான் மட்டும் என்ன பாவம் செய்தேன்?
- அன்னை ஏன் மனைவி விஷயத்தில் பலிக்கவில்லை?

என்று புழுங்குகிறது. இதைப் பற்றி அன்னை என்ன கூறியிருக்கிறார் எனக் கேட்கவும் கணவனுக்குத் தோன்றவில்லை. இப்படிப் பல ஆண்டுகள் கழிந்தன. மனம் மீண்டும் இதே கேள்விகளை எழுப்பிய பொழுது, புத்தகங்கள், நண்பர்கள், சொந்தச் சிந்தனை என பலவற்றையும் கலந்தபொழுது ஒருவர் அன்னை கூறியதை எடுத்துக் காட்டினார். இது பிரச்சினையில்லை, வாய்ப்பு, மேலும் வாழ்வு விரிவடைய வந்த வாய்ப்பு, என்று கூறினார். அதுவே சரியானால், அந்த வாய்ப்பைப் பெறுவதெப்படி? அதற்கு அவர் கொடுத்த அன்னை பதில்,

"உனக்கு மிகவும் பிடித்ததைப் பிரியமாக விட்டுக் கொடுக்கும் மனமிருந்தால், மனைவி பிரச்சினையிருக்காது. அது வாழ்வு வளர **உதவும்"** என்பது. அவருக்கு மிகப் பிரியமானது சமாதி தரிசனம்.



சமாதியையும் ஆசையாகத் தரிசனம் செய்தால் பலிப்பது ஆசைதான், பக்தியில்லை, என அவர் அறிவார். அதைப் பல மாதம் மனத்தோடு போராடி ஏற்றுக் கொண்டார். அது பிரியமாக ஏற்கப்படவேண்டும் என மேலும் போராடினார். அவர் போராட்டத்தில் அவருக்கு வெற்றி கிடைத்தது.

**மனைவி தலைகீழே மாறிவிட்டாள்.**

"என் மனைவியும் இப்படி மாறுவாள் என அவள் மாறிய பின்னும் என்னால் நம்ப முடியவில்லை. திருமணமாகி இத்தனை ஆண்டுகளாக இல்லாத மாறுதல். என்ன செய்தால் என்னை அழ வைக்கலாம் என்று இதுவரை முனைந்தவள், என்ன செய்து என்னை சந்தோஷப்படுத்தலாம் என்று ஒரே குறியாய் இருக்கிறாள்" என்று அவர் இன்று கூறினார்.

❊ ❊ ❊


**சொசைட்டியின் வெளியீடுகள்**

**கர்மயோகியின் நூல்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 40 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவு தபால் கட்டணம் ரூ. 15/- சேர்த்து M.O. செய்யவும்.

“அன்பர் உரை”

# Nov 17th, 1973

*(சென்னை மாம்பலம் தியான மையத்தில், நவம்பர் 17, 2001இல் திருமதி விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை)*

தாம் நூறாண்டு வரையிருந்தால் சத்திய ஜீவியம் பலிக்கும்,. இருப்பேனா எனத் தெரியாது. இறைவனிடம் கேட்டால், உனக்கு அது தெரிய வேண்டிய அவசியமில்லை. வேலையைச் செய் என்று கூறுகிறார் என்பது அன்னை எழுதியது. தாமும் அன்னையும் பூவுலகில் பூதவுடலிருந்தால் சத்திய ஜீவியம் வர நாளாகும், ஒருவர் உடலை நீத்து, சூட்சும உலகிலிருந்து யோகத்தைத் தொடர வேண்டும் என பகவான் உடலை நீத்தார்.

பகவானுடைய பூதவுடல் சத்திய ஜீவியம் வரத் தடை, அன்னை நூறாண்டுவரை இருக்க முடியாதது சத்திய ஜீவியம் பலிக்கக் குறை. நம் கடமை என்ன?

> சுயநலமாகவும், குறுகிய உள்ளத்துடனும், பொய்யை நம்பியும் வாழ்பவர் பரநலமாக, பரந்த மனப் பான்மையுடன் சத்தியத்தால் மட்டும் வாழ்வது அன்னை அதிகமாகப் பலிக்க உதவும்,

- சுயநலத்தைப் பற்றியே நினைக்க முடியாமல் வாழ்பவர் பலர்.
- தன்னை மிகப் பரந்த மனமுடைய பரநலவாதி என இடைவிடாமல் நினைக்கும் அதிகமான சுயநலமி பலர்.
- எனக்கு எதுவும் தெரியாது, பேசாமல் வேலை செய்கிறேன் என்று கூறும் மந்தமான சுயநலமியுண்டு.
- சுயநலமாக இல்லாவிட்டால் உள்ளதைக் காப்பாற்ற முடியாது என நம்புபவர் ஏராளம்.
- பரநலமாக இருக்கலாம், ஆனால் சுயநலமிகளுடன் வாழும்பொழுது அப்படியிருக்க முடியாது என்ற கொள்கையுண்டு.
- பரநலம் நமக்கு வேண்டியவருக்கு, நம்மிடம் அதுபோல் நடப்பவருக்கு, எல்லோரிடமும் அதுபோல் நடக்க முடியாது.



- அவையெல்லாம் உயர்ந்தவர்க்குரியன. காந்திஜி, நேரு, புத்தர் விஷயத்தை நாமெல்லாம் பின்பற்ற முடியாது,

என்ற பல்வேறு காரணங்களைக் கூறி சுயநலமாகவே இருக்க முடிவு செய்வது மனித இயல்பு. வேலை செய்பவனுக்கு உடல் நலம் தவறி மருந்து வாங்க ரூ.50 கேட்டதைக் கொடுத்த ஒருவர், கொஞ்ச நாழிகையில் அவனுக்கு ரூ.2000/- மருத்துவ உதவி கிடைத்ததை அறிந்தார். அவன் திரும்பிக் கொடுத்த ரூ.50/-யை அவர் பெற மறுத்துவிட்டார். அவர் மனம் இவ்விஷயத்தில் பரநலமானது என அவர் அறியும்படி எதிரொலி கேட்கிறது.

பிரியமில்லாதவரைச் சுயநலமி என்பர். பிரியமுள்ளவர்களை நல்லவர் எனக் கூறுவர். சுயநலமே பிரியமாக இருக்கும் (selfish affection) என நமக்குத் தோன்றுவதில்லை. சுயநலமான பிரியம், அதிகப் பிரியமாக இருக்கும். எந்தக் கட்டத்தில் தன் கட்டுப்பாட்டை அடுத்தவர் மீறுகிறாரோ, அந்த நேரம் பிரியம் வெறுப்பாக மாறும், மேற்கூறியவர்களில் யாரோ ஒருவர் எப்படிச் சுயநலத்தை விட்டு அகல்வது எனக் கேட்பதுண்டு, அப்படிக் கேட்பதே sincerity உண்மை. கேட்டபிறகு தன் சுயநலத்தைக் காணவோ, ஏற்கவோ மனம் தெளிவுபடாது. கடைக்குப் போய் தீபாவளிக்கு, தனக்குப் புது டிரஸ் எடுப்பவரில் யாரோ ஒருவருக்கு குழந்தைகட்கு, மனைவிக்கு வாங்காமல் எனக்கு மட்டும் வாங்கிக் கொள்கிறேன் எனத் தோன்றாது. வீட்டிற்கு வந்தபின் அவர்கள் கேட்டபின்தான் தான் மறந்தது தெரியும். அது மறதியில்லை, பூரண சுயநலம்.

தீபாவளிக்கு ஜவுளி வாங்கப் போன பெண் வீட்டில் உள்ள அனைவருக்கும் வாங்கிய பின் பணம் மீதியில்லை என்று தனக்கு ஒன்றும் வாங்காமல் வந்து, அனைவருக்கும் புதுத் துணிகளைக் கொடுத்தபின், அம்மா தனக்குப் புடவை வாங்காமல் நமக்கெல்லாம் வாங்கி வந்திருக்கிறாள் என்று உணர முடியாத குழந்தைகள் உண்டு, பெரியவர்களும் உண்டு.

> **இவை தெரியாதவையில்லை, தெரிந்து கொள்ள முடியாதவை இல்லை, சுயநலத்திற்குக் கண்ணில் படாதவை, தெரிந்து கொள்ளாதவை.**

பிரம்மத்தைக் காண முடியாது, கண்டால் எடுத்துக் கூற முடியாது என்ற மரபில் நாம் பிறந்து வளர்ந்தவர்கள். பகவான்ஸ்ரீ அரவிந்தர் இதை ஏற்றாலும், இதைக் கடந்த கட்டத்திலுள்ள உண்மையை The Life Divineஇல் இரண்டாம் புத்தகத்தில் இரண்டாம் அத்தியாயத்தில் கூறுகிறார்.

- பிரம்மம் உலகை சிருஷ்டித்தது.
- சிருஷ்டியில் உள்ள அனைத்தும் பிரம்மம்.
- அதனால் பிரம்மத்தின் சுவடு, அறிகுறி தெரியாமலிருக்காது.
- நாம் பிரம்மத்தைத் தேடினால் சுவடுகள் தெரியும்.
- சுவடுகளைப் பின்பற்றினால் மூலம் தெரியும். மூலம் பிரம்மம் என்கிறார்.

சைமன் என்ற சக்கிலிக்குக் கனவில் கடவுள் தோன்றி இன்று நான் உனக்குக் காட்சியளிக்கிறேன் என்றார். நாள் முழுவதும் கடவுளை எதிர்பார்த்து ஏமாந்தவன் கடவுளைக் கேட்கிறான். "நான் சிறுவனாக வந்தேன், அன்பாகப் பேசினாய், கிழவியாக வந்தேன், உதவி செய்தாய், சிறுவனும் கிழவியும் கடவுள்களே. உன் அன்பும் உதவியும் கடவுளே. உனக்குத் தரிசனம் கிடைத்துவிட்டது. நீ அறியவில்லை" என்று கடவுள் கூறுவதாக டால்ஸ்டாய் கதை. சிறுவனும், கிழவியும், அன்பும், உதவியும் ஆண்டவன் அடிச்சுவடுகள்.

உருக்கமான பக்தர் ஒருவர் காலையில் 10 நிமிஷத் தியானம் செய்த பொழுது அன்னை தத்ரூபமாக எதிரில் நின்றார். உன் முந்தாணியைத் தரையில் விரித்துப் போடு என்றார். தம்மிரு பாதங்களையும் முந்தாணியில் பதித்து நின்றார். தியானம் கலைந்தது. அறை முழுவதும் ஜோதி மயமாக இருந்தது. முந்தாணி ஜொலிக்கிறது. அவரை சந்தித்தவரெல்லாம் என்ன விசேஷம், உங்களைச் சுற்றி ஒளி வெள்ளமாக இருந்ததே, என்ன புடவையிது? எங்கு வாங்கினீர்கள்? என்றனர். இவர் முழு சுயநலம். சுயநலமான நம்பிக்கை உடையவர். இவருக்கும், இவனைச் சேர்ந்தவருக்கும் அன்னை தவறாமல் பலிக்கிறார். இவரே சுயநலமில்லாதவரானால், இன்னுள்ள நம்பிக்கை பரநலமான மனத்தில் சுருங்கிவரும். ஒருவர் தன்



வருமானத்தைப் பலருடன் பகிர்ந்து கொண்டால், பலன் குறையுமல்லவா? இவர் சுயநலத்தை விட்டுப் பரநலத்தை ஏற்க,

- தான் சுயநலமி என மனமும் உணர்வும் ஏற்க வேண்டும்.
- ஏற்றபின் மனம் வெட்கப்பட வேண்டும்.
- மனம் பரநலமாகப் பிரார்த்திக்க வேண்டும்.

அது நடந்தால் மேற்சொன்னது போல் தரிசனம் கிடைக்காது. குறுகிய உள்ளத்தில் தீவிரம் தரிசனம் பெறும். மனம் பரந்தால் தீவிரமிருக்காது. தரிசனம் இருக்காது. பரநலமான பின்னும் தரிசனம் கிடைக்கும் அளவுக்குத் தீவிர நம்பிக்கையிருந்தால், இவர் தரிசனம் பெற்ற சமயம், இவரைச் சார்ந்தவர் அனைவருக்கும் தரிசனம் கிடைக்கும். இப்படிப்பட்டவர் மாநிலத்தில் ஒரு 50 வருஷப் பிரச்சினை இருந்தால், இவர் மனம் மாறிய நேரம், அப்பிரச்சினை தீரும்.

Nov. 17, 73 அன்று மாலை 7.30க்கு பிரம்மாண்டமான ஜோதியாக அன்னை எழுந்து உலகெல்லாம் பரவி, அனைவர் உள்ளத்துள்ளும் நுழைந்தார். சுயநலமற்ற பக்தர்களுக்கு அவர்கள் உலகத்தில் அதுபோல் செயல்பட முடியும்.

- சுயநலம் பிரகாசமாக இருக்கும்.
- சுயநலம் பிரியமாக இருக்கும்.
- சுயநலம் திறமை மிகுந்து இருக்கும்.
- பலருக்கும் தன் சுயநலத்தின் பெருமைக்காக உதவி செய்யும்.
- சுயநலம் பக்தி செலுத்தும்.
- சுயநலத்திற்கு அதிக நம்பிக்கையிருப்பதுண்டு.

எவ்வளவு சிறப்புப் பொருந்தியதெனினும் சுயநலம் சுயநலமே. பரநலம் எதுவுமில்லாவிட்டாலும், சுயநலத்தை விடச் சிறந்தது. பரநலம் பிரகாசமாக, பிரியமாக, திறமையாக, பக்தி, நம்பிக்கையுடன் நம்முள் மலர்வது நாம் அன்பராவதாகும்.

❊ ❊ ❊

## ரெயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்ட்

Life Response என்ற சொல் உலகுக்குப் புதியது. இச்சொல் கூறும் கருத்தை நம் நாட்டில் நாம் அறிவோம். அதற்கு இதுவரை நாம் பெயரிட்டதில்லை. வெளிநாட்டிலும் இது போன்ற நிகழ்ச்சிகளுண்டு. அவர்கள் இதைக் கருதுவது மூட நம்பிக்கை என்று நினைக்கிறார்கள். ஆன்மீக ஞானம் உள்ளவர்க்கு, Life Response என்ற ஞானம்,

**உலகம் இதுவரை பெறாத ஞானம்.**
**எலக்ட்ரானிக்ஸ் துறைக்கு கம்ப்யூட்டரைவிட,**
**வாழ்வுக்கு Life Response முக்கியம்.**

என்று அறிவார்கள்.

கடந்த 500 ஆண்டுகளில் விஞ்ஞானத்தால் உலகம் பெற்ற நன்மைகளுக்குச் சமமானவற்றை உலகம் ஓராண்டில் பெற உதவும் ஞானம் Life Response.

இதை எல்லா கோணத்திலிருந்தும் புரிந்து கொள்ளலாம். Good will நல்லெண்ணத்தின் மூலமாக நடப்பவற்றை நான் முக்கியமாகக் கருதுகிறேன்.

ரெயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டில் வேலை செய்யும் அன்பர் கம்ப்யூட்டரில் வேலை செய்பவர். Guru Soft என்ற Websiteல் Life Response பற்றிய அனுபவங்களை வெளியிடுவதால், இந்த அன்பர் கீழ்க்கண்ட அனுபவத்தை அந்த Siteக்கு அனுப்பியிருந்தார்.

நான் இந்த போர்டில் வேலை செய்கிறேன். பரீட்சை சம்பந்தமான வேலைகள் என்னுடையது. பரீட்சைக்குத் தயார் செய்து பல கட்டங்களுண்டு. அது பிரம்மாண்டமான வேலை. சென்ற வாரம்



நான் போர்ட் சேர்மனிடம் இதை எலக்ட்ரானிக் மூலம் செய்வது சுலபம், செலவு குறைவு என்றேன். சேர்மன் சம்மதப்படவில்லை, இது முடியும் என்பது என் தீர்மானம். 3 நாள் கழித்து சேர்மன் என்னை அழைத்து ஒரு அயல்நாட்டு Software கம்பனி பரீட்சையை கம்ப்யூட்டர் மூலம் நடத்துகிறது. அதை நான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். நான் விரும்பியவையும், மற்றவைகளையும் கம்பனி கொண்டுவந்துள்ளது.

- *நல்லெண்ணம் செயல்படும்.*
- *நல்லெண்ணம்* **Life Response** *மூலம் செயல்படும்.*
- *அன்னை நல்லெண்ணம் மூலம்* **Life Response** *ஏற்படுத்துகிறார்.*

இந்த அன்பரின் தெளிவான நல்லெண்ணம் கம்பனிக்கும், பரீட்சை எழுதுபவர்கட்கும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நல்லதை செய்தது.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு நேரம் பிரார்த்தனை சாதிப்பதை, வாழ்வையும், செயலையும் முறைப்படுத்தினால் பிரார்த்தனையின்றி தாமே அதுபோன்ற காரியங்கள் நடக்கும்.

*ஆன்மீக வசதியில்லாவிடில் பிரார்த்தனை தேவை.*
*அதிருந்தால் பிரார்த்தனை தேவையில்லை*

# Pride and Prejudice

இக்கதை 3 வால்யூமாக 61 அத்தியாயங்களாக 345 புத்தகமாக வெளிவந்துள்ளது. இக்கதையின் விமர்சனம் சரியாகப் புரிய கதையின் முக்கிய நிகழ்ச்சிகள் ஒன்று விடாமல் தெரியவேண்டும். அவற்றை மட்டும் இதில் காணலாம்.

# Vol.I,

## Chapter 1 :

Mr. பென்னட் லாங்பார்ன் என்ற வீட்டில் மெரிடன் ஊன்ற கிராமத்தில் வசிக்கும் ஜமீன்தார். இவருக்கு ஜேன், எலிசபெத், மேலி, கிட்டி, லிடியான என 5 பெண்கள். இவரது ஆண்டு வருமானம் £2000, இவருக்கு ஆண் வாரிசு இல்லாததால் இவருக்குப் பின் இவர் சொத்து, இவரது அண்ணன் மகனான காலின்ஸ் என்பவருக்கும் போகும்.

இங்கிலாந்தில் வடபகுதியிலிருந்து பிங்லி என்றொரு இளைஞன் இவர் கிராமத்தில் நெதர்பீல்ட் என்ற பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டு நண்பன் டார்சியுடன்அங்கு வருகிறான். பிங்லிக்கு திருமணமான சகோதரி லுயிஸா என்பவளும் திருமணமாகாத சகோதரி கேரலின் என்பவளும் உண்டு. இருவரும் உடன் வருகிறார்கள். லூயிஸாவின் கணவன் ஹர்ஸ்ட், பிங்லிக்கு £5000 வருஷ வருமானம், டார்சிக்கு £10,000 வருமானம், பிங்லியின் இரு சகோதரிகட்கும் தலைக்கு £20,000 சொத்தாக இருக்கின்றது.

Mrs. பென்னட் கணவனிடம் பிங்லி வரும் செய்தியைக் கூறி அவனை சந்திக்கும்படி கேட்கிறாள். அவரும் அவளை சந்திக்கின்றார்.



## Chapter 2 :

தான் பிங்லியை சந்தித்ததை நழ். பென்னட் எவரிடமும் சொல்லாததால் பெண்கள் பிங்லி குடும்பத்தைப் பற்றிப் பேசும் பொழுது அவர் மனைவி கசங்குகிறாள். கணவன் பிங்லியை சந்தித்ததை அறிந்து அனைவரும் ஆனந்தப்படுகின்றனர்.

## Chapter 3 :

Mr. பென்னட் பிங்லிக்கு அழைப்பு அனுப்புகிறார். பிங்லி வந்து 10 நிமிஷம் அவரைப் பார்த்துவிட்டுப் போகிறார். அவர் பெண்களின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டதால், அவர்களைக் காணலாம் என்று நினைக்கிறார். பலனில்லை. இலண்டனுக்குப் போய் பலருடன் திரும்பி வந்து நடனம் ஆடும் ஹாலுக்கு வருகிறார். டார்சி பிங்லியை விட அழகானவர் என்பது பொது அபிப்பிராயம். பிங்லி அனைவருடனும் கலந்து பழகுகிறார். டார்சி ஒதுங்கி நிற்பதால் அவரைக் கர்வி என வெறுக்கின்றன: பிங்லி ஜேனுடன் இருமுறை நடனம் ஆடுகிறார். எலிசபெத்துடன் ஆடுகிறார். டார்சி ஒதுங்கியிருப்பதால், அவரை ஆட அழைக்கிறார். எலிசபெத்துடன் ஆடும்படிக் கூறுகிறார். டார்சி அவள் அழகியல்ல, அதனால் பிறர் விலக்கிய பெண்ணுடன் தான் ஆடமாட்டேன் என்கிறார். பென்னட்டிடம் வந்து விவரம் கூறுகிறார்கள்.

## Chapter 4 :

ஜேனும், எலிசபெத்தும் நடனம் முடிந்தபின் பிங்லியைப் பற்றிப் புகழ்ந்தும், அவனுடைய சகோதரிகளைப் பற்றியும் பேசுகின்றனர். ஜேன் அவர்கள் நல்லவர்கள் என்ற பொழுது, எலிசபெத் அவர்கள் தங்களை மட்டமாக நினைப்பதை சுட்டிக்காட்டுகிறார். £100,000 தன் தகப்பனாரிடமிருந்து பிங்லி பெற்றான். பிங்லிக்கு வயது 23 டார்சிக்கு 28, பிங்லி டார்சியை அதிகமாக நம்புகிறான். எங்கு

போனாலும் பிங்லியை அனைவருக்கும் பிடிக்கும். டார்சியை எவருக்கும் பிடிக்காது. மெயிடனில் பிங்லிக்கு அனைவரையும் பிடிக்கிறது. டார்சி அவர்களுடைய குறைபாடுகளை சுட்டிக் காட்டுகிறான். அனைவரும் ஜேன் அழகி என்றனர்.

## Chapter 5 :

வில்லியம் லூகாஸ் என்பவர் லாங்பார்னுக்கு அருகில் வசிப்பவர். சர் பட்டம் பெற்றவர். ெ மேயராக இருந்தபொழுது ராஜாவை வரவேற்றார். நல்ல மனிதன். புத்தியில்லாதவர். ஷார்லோட் அவர் மகள், 27 வயதில் திருமணமாகாதவர். எலிசபெத்திற்கு நெருங்கிய தோழி. அவள் தங்கை மெரையா. அன்று பிங்லி முதலில் ஷார்லோட்டுடன் நடனம் ஆடுகிறான். எலிசபெத்தின் டார்சி டான்ஸ் ஆட மறுத்தது தவறில்லை என ஷார்லோட் கூறுகிறார். பணம் உள்ளவன் பிறரை அவமதிப்பது வழக்கம் என்கிறாள்.

## Chapter 6:

Mr. பென்னட் குடும்பத்தினர் நெதர்பீல்ட்க்கு வந்து பிங்லி, டார்சியுடன் விருந்து சாப்பிட்டனர். இவர்களும் திரும்ப பென்னட் வீட்டிற்கு விருந்திற்கு வந்தனர். இந்த சமயத்தில் ஷார்லோட் எலிசபெத்திடம் பிங்லியைப் பற்றிப் பேசுகிறாள். ஜேன் மீது பிங்லிக்கு அபிப்பிராயமிருக்கிறது. ஜேனுக்கு அபிப்பிராயம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தனக்கு அபிப்பிராயமிருப்பதாகக் காட்டிக் கொள்ளவேண்டும் என்கிறாள். எலிசபெத்திற்கு அது சரியாகப் படவில்லை. ஜேனையே கவனித்திருந்து எலிசபெத்திற்கு டார்சியின் கவனம் தன்மீது இருப்பது தெரியவில்லை. அவள் கலகலப்பாக இருப்பது டார்சிக்குப் பிடித்திருந்தது. மேலும் டார்சி அவளைக் கவனித்தான். சர் வில்லியம் வீட்டு நடனத்தில் எலிசபெத் கர்னலுடன் பேசுவதை டார்சி கவனிப்பதை எலிசபெத் பார்த்தாள். சர் வில்லியம்ஸ் டார்சியுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது எலிசபெத்தை அழைத்து டார்சியுடன் நடனம் ஆடச் சொன்னார். டார்சி ஒப்புக்



கொண்டான். எலிசபெத் மறுத்துவிட்டாள். கரோலின் பிங்லி டார்சியிடம் வந்து என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டபொழுது எலிசபெத் பென்னட்டின் அழகிய விழிகளை நினைத்துப் பார்க்கிறேன் என்றான்.

## Chapter 7:

Mr. பென்னட் எஸ்டேட் வருமானம் 2000. ஆண் வாரிசு இல்லாததால் அது Mr. காலின்ஸ்க்குப் போகும். Mrs. பென்னட்டின் சகோதரி தன் தகப்பனாரிடம் குமாஸ்தாவாக வேலை செய்து இப்பொழுது வக்கீலாகவுள்ள Mr. பிலிப்சை மணந்தார். Mrs. பென்னட் சகோதரர் Mr. கார்டினர் லண்டனில் நல்ல வியாபாரத்தில் இருக்கிறார். லிடியாவும், கிட்டியும் அர்த்தமற்ற பெண்கள் எனத் தகப்பானர் கூறுவார். கரோலின் பிங்லி ஜேனை தம் வீட்டிற்கு அழைக்கிறார். மழை வரும் போலிருக்கிறது. வண்டியில் போகாதே, குதிரை மீது போனால் நனைவார். நெதர் பீல்டில் தங்க வேண்டிவரும் என்று தாயார் போதிக்கிறார். அப்படியே போய் அவளுக்கு ஜலதோஷம் வருகிறது. அவளைப் பார்க்க எலிசபெத் 3 மைல் நடந்து போகிறார். நடந்து துணியெல்லாம் மண்ணாகி, தலைகலைந்து வந்த கோலம் கரோலினுக்கும், லூயிஷலாவுக்கும் கேலியாகயிருக்கிறது. டார்சி எலிசபெத்தின் அழகு கூடியுள்ளதை மட்டும் காண்கிறான். பிங்லி தனக்கு ஜேன் மீதுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துகிறான். எலிசபெத் வீடு திரும்ப முனைந்தபொழுது கரோலின் அவளை அங்கேயே தங்குமாறு அழைக்கிறார்.

## Chapter 8 :

ஜேனுக்கு உடல் நலம் குணமாகவில்லை. பிங்லி மட்டும் ஆர்வம் காட்டுகிறார். மற்ற அனைவரும் மரியாதையாகப் பழகுகிறார்கள். டின்னர் முடிந்து எலிசபெத் ஜேனிடம் திரும்பியவுடன் கரோலின் அவளைத் திட்ட ஆரம்பித்துவிட்டாள். டார்சியையும் திட்ட அழைக்கிறார் கரோலின் அவன் சேரவில்லை. லூயிசாவும்,

கரோலினும் எலிசபெத்தின் உறவினர்களான வக்கீல், வியாபாரிகளைக் கேவலமாகப் பேசுகிறார்கள். பிங்லி அவற்றை மீறி ஜேனை விரும்புகிறார். எவ்வளவு அழகாக இருந்தாலும், தாழ்ந்த உறவினர்கள் நல்ல சம்பந்தத்திற்கு தடை என டார்சி கூறுகிறான். ஜேன் தூங்கும் பொழுது எலிசபெத் ஹாலுக்கு வருகிறாள். மற்றவர்கள் அவளை சீட்டாட அழைக்கிறார்கள். அவள் மறுத்துவிடுகிறாள். கரோலின் டார்சியை அவன் தங்கை தன் உயரமிருப்பாளா எனக் கேட்டதற்கு எலிசபெத் உயரம் இருக்கிறான் என்கிறான். ஜேன் தேரதால் டாக்டர் வருகிறார்.

## Chapter 9:

Mrs. பென்னட் வந்து ஜேனைப் பார்க்கிறார். உடன் லிடியாவும், கிட்டியும் வருகிறார்கள். ஜேன் வீட்டுக்குப் போகலாம் என்பதைத் தாயார் ஏற்கவில்லை. பிங்லியைப் பார்த்ததும் அவர் தான் அந்த ஊரிலேயே நிரந்தரமாக இருக்கலாம் போலிருக்கிறது என்றார். டார்சி கிராம வாழ்வு குறுகியது என்கிறார். கோபப்பட்டு பென்னட் அம்மையார், டார்சியை மறுத்துப் பேசுகிறார். பேச்சு இலக்கியத்திற்குப் போகிறது. லிடியா பிங்லியை தான் ஒரு நடனம் ஏற்பாடு செய்வதாகக் கூறியதை நினைவுபடுத்துகிறார். ஜேன் குணமானவுடன், நடனம் லிடியா சொல்லும் நாளில் ஏற்பாடு செய்வதாக பிங்லி கூறுகிறார்.

## Chapter 10:

மறுநாள் கரோலின் டார்சி கடிதம் எழுதுவதை அருகிலிருந்து பாராட்டினாள். எலிசபெத் அதைக் கவனித்தாள். பிங்லியும் பேச்சில் கலந்து கொண்டான். பிங்லி மற்றவர் பேச்சை அதிகமாக ஏற்பதாக டார்சி சொல்லிய பொழுது எலிசபெத் அதை பிங்லியின் பெருந்தன்மை என வர்ணித்தாள். பிங்லிக்குப் பெரிய சந்தோஷம். எலிசபெத் பிங்லியை ஆதரித்தும் டார்சி பிங்லியை எதிர்த்தும் பேசினர். டார்சி கரோலினையும், எலிசபெத்தையும் பாடும்படிக் கேட்ட பொழுது எலிசபெத் மறுத்துவிட்டாள். கரோலின் பியானோ



வாசித்தாள். இச்சமயங்களில் டார்சியின் பார்வை தன் மீதிருப்பதை எலிசபெத் உணர்ந்தாள். எலிசபெத் இதை எப்படி புரிந்து கொள்வது என்று அறியவில்லை. பாட்டு முடிந்தவுடன் டார்சி எலிசபெத்திடம் வந்து தன்னுடன் நடனம் ஆட அழைத்தான். எலிசபெத் சிரித்தாள் பதில் சொல்லவில்லை. “நான் நடனம் ஆடினால் உன் கேலிக்கு ஆளாவேன்” என்று கூறி மறுத்தாள். டார்சி பிரியமாகப் பேசியதை எலிசபெத் கவனிக்கவில்லை. அவள் சுபாவம் இனிமையும் நிறைந்ததால், பிறர் மனம் புண்படும்படி அவளால் பேசமுடியாது. அதுவரை அந்த அளவுக்கு எந்தப் பெண்ணும் கவரவில்லை. கரோலினுக்கு பொறாமை. எலிசபெத்தைப் பற்றிக் குறைவாகப் பேசினாள். மறுநாள் தோட்டத்தில் டார்சியுடன் கரோலின் உலாவும் பொழுது எலிசபெத்தைப் பற்றிக் குறைவாகப் பேசினாள். மறுநாள் தோட்டத்தில் டார்சியுடன் கரோலின் உலாவும் பொழுது எலிசபெத்தும் லூயிஸாவும் எதிரில் வந்தனர். பாதை குறுகியது. மூன்று பேர் தான் நடக்கலாம். லூயிஸா டார்சியுடன் கைகோர்த்துக் கொண்டாள். எலிசபெத் தனியே நிற்பது டார்சிக்குக் கஷ்டமாக இருந்தது. எலிசபெத் வீட்டுக்குத் திரும்பினாள்.

## Chapter 11:

ஜேன் சற்று குணமடைந்து பிங்லி சகோதரிகள் உள்ள அறைக்கு வருகிறாள். அனைவரும் வரவேற்கின்றனர். பிங்லி ஆர்வமாக அவளை கவனிக்கிறான். எலிசபெத்திற்கு இது பெருமகிழ்ச்சி. கரோலின் அறையில் உலவ எலிசபெத்தை உடன் அழைக்கிறாள். டார்சியையும் அழைக்கிறான். எலிசபெத் வருகிறாள். டார்சி மறுத்துவிடுகிறான். அவர்கள் மூவரும் பேசும் பொழுது டார்சியின் கவனம் எலிசபெத்தும் அதிகமாக இருப்பதை கரோலின் விரும்பவில்லை. டார்சியின் கவனத்தைத் திருப்ப கரோலின் பாட ஆரம்பிக்கின்றாள்.

## Chapter 12:

இழ். காலின்ஸ் லாங்பார்னுக்கு வருகிறார். இவர் தகப்பனார் படிக்காதவர். குறுகிய உள்ளமுள்ள கருமி. முதல் தலைமுறை படிப்பு என்பதால் உயர்ந்த படிப்புத் திறமை காலின்ஸை கோமாளி ஆக்கிவிட்டது. தன் படிப்பின் சிறப்பை மடத்தனமாக வெளியிடுவது இவருடைய ஆழ்ந்த ஆர்வம். தான் லாங்பார்ன் எஸ்டேட்டைப் பெறப்போவதால் நழ். பென்னட் பெண்களில் ஒருவரை மணக்க விரும்புகிறார். ஜேனுக்கு பிங்லி மனதிலிருப்பதால் காலின்ஸ் தன் கவனத்தை எலிசபெத்தின் மீது செலுத்துகிறார். லேடி காதரீன் ஜமீனில் இவர் வேலை செய்கிறார். இவர் அங்கு ஒரு பாதிரியார். தனக்கு லேடியுடனுள்ள தொடர்பை குறிப்பிடாமல் பேச இவரால் முடியாது.

## Chapter 13:

டின்னரில் காலின்ஸ் லேடி காதரீன் மகளைப் பற்றிக் கூறுகிறார். அவர் உடல் நலம் குன்றியவள். டின்னருக்குப் பிறகு காலின்ஸ் பிரார்த்தனை புத்தகம் படிக்கிறார். குறுக்கே லிடியா இராணுவ ஆபீசர்களைப் பற்றிப் பேசியதால் படிப்பதை நிறுத்திவிடுகிறார். ஜேனும், எலிசபெத்தும் லிடியா சார்பில் மன்னிப்பு கோருகிறார்கள்.

## Chapter 14:

காலின்ஸ் Mrs. பென்னட்டிடம் திருமணத்தைப் பற்றிப் பேசுகிறார். ஜேன் அநேகமாக பிங்லியை மணக்கலாம் என்பதால் அவளைத் தவிர மற்ற எந்த பெண்ணையாவது அவர் மணக்கத் தனக்குச் சம்மதம் என்று தாயார் சொல்கிறார். காலின்ஸ் பெண்களுடன் மெரிடன் கிராமத்திற்குப் போய் வருகிறார். அவர் எலிசபெத்தை தான் விரும்புவதாகத் தாயாரிடம் கூறுகிறார். வழியில் பெண்கள் டென்னி என்ற ஆபீசரைக் கண்டனர். பென்னி அவர்கட்கு தன் நண்பனான விக்கம் என்பவரை அறிமுகப்படுத்துகிறார். அந்த நேரம் டார்சியும், பிங்லியும் ஜேனை விசாரிப்பதற்காக லாங்பார்ன் புறப்பட்டவர்கள் வருகிறார்கள். அனைவரும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். விக்கமும், டார்சியும் சந்திப்பதும், அவர்கள் முகம் கறுப்பதையும் எலிசபெத் கவனிக்கிறாள். விக்கம் டார்சிக்கு வணக்கம் சொல்வதை டார்சி ஏற்கவில்லை எனவும் தெரிகிறது. பெண்கள் அவர்கள் சித்தி Mrs. பிலிப்ஸ் வீட்டுக்குப் போவதால் டென்னியும் உடன்வருகிறார். அழைப்பில்லை என்றாலும் விக்கம் கலந்து கொள்கிறான்.

## Chapter 15:

காலின்ஸும் 5 பெண்களும் Mrs. பிலிப்ஸ் வீட்டு விருந்திற்கு வருகின்றனர். விக்காம் வந்தது பெண்களுக்கு அதிக சந்தோஷம். விக்காம் மற்ற ஆபீசர்களை விட அழகிலும், அழகாகப் பேசுவதிலும், கண்ணியமாக நடப்பதிலும் பெருமளவு பொலிவு பெற்றிருந்தான். அத்தனை பெண்கள் பார்வையும் அவன் மீதிருந்தது. அனைவர் மனத்திலும் அவனேயிருந்தான். அவன் கவனம் எலிசபெத் மீதிருந்தது. விஷயம் எதுவானாலும் அவ்வளவு அழகாக அவனால் பேச முடிந்தது. எலிசபெத்தும் விக்காமும் சந்தித்தார்கள். தான் டார்சி வீட்டில் வளர்ந்தது, அவனுடைய தகப்பனார் தனக்களித்த (living) பாதிரியார் வேலையை டார்சி தர மறுத்தது ஆகியவற்றை எலிசபெத்திடம் கூறினாள். அவனுக்கு டார்சி மீது வெறுப்பும், விக்காம் மீது பரிவும் எழுந்தன. பெரிய மனிதர்களிடையே டார்சி பக்குவமாக நடந்து கொள்வான் எனவும் விக்காம் கூறினான். லேடி காதரீன் டார்சியின் சின்னம்மா எனவும் அவள் பெண்ணை டார்சி மணக்க இருப்பதாகவும் எலிசபெத் அறிந்தாள்.

## Chapter 16:

ஜேனிடம் தான் விக்காம் மூலமாக டார்சியைப் பற்றி அறிந்ததை எலிசபெத் கூறுகிறார். ஜேனுக்கு நம்பிக்கையில்லை. எப்படி பிங்லிக்குத் தெரியாமலிருக்கும் என்பது ஜேனுடைய கேள்வி. எலிசபெத் விக்காமை முழுவதும் நம்புகிறார். பிங்லி ஏமாந்தவன்

என்பது எலிசபெத் அபிப்பிராயம். பிங்லியின் சகோதரிகள் நேரில் வந்து வீட்டுக் நடனம் அழைப்பு தருகின்றனர். இந்த நடன நிகழ்ச்சியில் எலிசபெத் விக்காமோடு அதிகமாக ஆட விரும்புகிறாள். காலின்ஸ்க்கும் அழைப்பு வருகிறது. காலின்ஸ் முதல் இரண்டு நடனம் தன்னுடன் ஆட எலிசபெத்தை அழைக்கும்.

## Chapter 17:

இந்த நடன நிகழ்ச்சியில் விக்காமை முழுவதும் கவர வேண்டும் என்ற தீர்மானத்தோடு வந்த எலிசபெத், விக்காம் வரவில்லை என்று காண்கிறாள். எலிசபெத்திற்கு விக்காம் இந்த செய்தியை அனுப்பியிருந்தான். அவளுக்கு டார்சி மீது கோபம் வருகிறது. டார்சியிடம் நல்லபடியாகப் பழகுவது விக்காமுக்குத் துரோகம் என நினைக்கிறாள். காலின்ஸ் நடனத்தில் தவறி ஒரு பெண் மீது இடித்துக் கொள்கிறான். ஷார் லோட்டிடம் எலிசபெத் டார்சியை திட்டிக் கொண்டிருக்கும் பொழுது டார்சி வந்து தன்னுடன் ஆட அழைக்கிறான். பதில் சொல்லமுடியாமல் ஏற்றுக் கொள்கிறாள். இது உன் அதிர்ஷ்டம் என ஷார் லோட் கூறுவது எலிசபெத் காதில் விழவில்லை. விக்காமை நினைத்துக் கொண்டு அதிர்ஷ்டத்தைக் கைவிடாதே என ஷார்லோட் புத்திமதி கூறுகிறாள். டார்சியுடன் நடனம் ஆடும் பொழுது எலிசபெத் அவனைப் பேசும்படி அழைக்கிறாள். பேச்சில் தனக்கு விக்காமைத் தெரியும் என்கிறாள். முதலில் அழகாகப் பழகுவான் என்று டார்சி கூறுகிறான். டார்சிக்குப் பிறகு கரோலின் வந்து விக்காமைப் பற்றி எச்சரிக்கிறாள். எலிசபெத் குமுறுகிறாள். ஜேன் மூலம் விக்காமைப் பற்றி பிங்லி அபிப்பிராயம் வருவதையும் எலிசபெத் ஏற்கவில்லை. காலின்ஸ் டார்சியார் என அறிந்து அவனுடன் போய்ப் பேச முயல்வதை எலிசபெத் தடுக்க முயல்கிறாள். முடியவில்லை. காலின்ஸ் டார்சியார் என் அறிந்து அவனுடன் போய்ப் பேச முயல்வதை எலிசபெத் தடுக்க முயல்கிறாள். முடியவில்லை. காலின்ஸ் போய்ப் பேசி அவமானப்படுகிறான். Mrs. பென்னட் உரக்க தன் அபிப்பிராயங்களைக் கூறுவது அனைவர்



காதிலும் விழுகிறது. பிங்லி திருமணம் முடிந்ததாகவும், டார்சி கர்வி எனவும், பிங்லி மூலம் மற்ற பெண்களுக்கு பெரிய வரன்கள் வரும் எனப் பேசுகிறார். அது பிங்லி, டார்சி காதிலும் விழுகிறது. பிங்லி தன் தங்கையைப் பாடச் சொல்லும் பொழுது மேரி அழைப்பின்றிப் போய்ப் பாடி அவமானப்படுத்துகிறாள். Mrs. Bennet பேச முயன்றதை பிங்லி குடும்பத்தார் ஏற்கவில்லை.

## Chapter 18:

Mrs. பென்னட் எலிசபெத்தும் காலின்ஸும் சந்திக்க ஏற்பாடு செய்கிறார். தன்னை மணக்கும்படி காலின்ஸ் கேட்கிறார். எலிசபெத் மறுக்கிறார்.பெண்கள் மறுத்தால் சம்மதம் என தான் அறிவதாகக் கூறி மீண்டும் மீண்டும் தன் வேண்டுகோளை வலியுறுத்துகிறார். அவள் மறுத்துவிட்டான்.

## Chapter 19:

ஙழ்ள். பென்னட் கணவனிடம் போல் எலிசபெத்தை வற்புறுத்தச் சொல்கிறாள். காலின்ஸை மணக்காவிட்டால் தான் இனி எலிசபெத் முகத்தில் விழிக்க மாட்டேன் என்கிறார். தகப்பனார். நீ காலின்ஸை மணந்தால் நான் உன் முகத்தில் விழிக்க மாட்டேன் என்கிறார். ஙழ்ள். பென்னட்டின் முயற்சிகள் தொடர்ந்தன. காலின்ஸ் மறுத்துவிட்டார்.

## Chapter 20:

மறு நாள் பெண்கள் மெரிடன் வந்து விக்காமை சந்திக்கிறார்கள். விக்காம் தான் ஏன் நடன நிகழ்ச்சிக்கு வரவில்லை என விளக்கமாகக் கூறுகிறான். நான் வந்து அசம்பாவிதம் நேரக் கூடாது. என வரவில்லை என்கிறான். எலிசபெத் அவன் பொறுமையை மெச்சுகிறாள். வீடு திரும்பியதும் கரோலினிடமிருந்து அனைவரும் புறப்பட்டுவிட்டதாகக் கடிதம் வந்தது. கடிதத்தில் டார்சியின் தங்கை பிங்லியை மணப்பதை அனைவரும் விழைவதாக

எழுதியிருந்தது.

## Chapter 21:

பென்னட் குடும்பத்தார் லூகாஸ் வீட்டில் சாப்பிட ஏற்பாடு. ஷார்லோட் மறுநாளும் வந்து காலின்ஸுடன் இடைவிடாது பேசிக்கொண்டிருந்தாள். எலிசபெத்திற்கு காலின்ஸ் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் ஷார்லோட் இதை ஏன் தான். மறுநாள் அதிகாலையில் காலின்ஸ் எழுந்து லூகாஸ் வீட்டிற்குப் போனான். மாடியிலிருந்து காலின்ஸ் வருவதைக் கண்ட லூகாஸ் வந்து வரவேற்றாள். வெகு சீக்கிரம் காலின்ஸ் ஷார் லோட்டை மணப்பது முடிவாயிற்று. லூகாஸ் குடும்பமே சந்தோஷப்பட்டது. அடுத்த நாள் காலின்ஸ் தன்னூர் திரும்புகிறான். ஷார்லோட்டிடமிருந்து காலின்ஸை மணக்கும் செய்தியை அறிந்த எலிசபெத் அவதியால் துடிக்கிறாள். நடக்காது என்கிறாள். ஷார்லோட் நான் காதலை நாடவில்லை. வசதியை நாடுகிறேன். உனக்கு காலின்ஸ் பிடிக்கவில்லை. அவர் நல்ல மனிதர். அதனால் ஏற்றுக் கொண்டேன் என்கிறாள்.

## Chapter 22:

சர் வில்லியம்ஸ் வந்து Mrs. பென்னட்டிடம் தன் மகள் காலின்ஸ் மணக்கப் போவதாகக் கூறினார். ஒரு வாரம் கழித்து காலின்ஸ் லாங்பார்னுக்கு வந்தார். Mrs. பென்னட்டால் கோபத்தை அடக்கவே முடியவில்லை.

# Vol II

## Chapter 1

கரோலின் ஜேனுக்கு எழுதி அந்த ஆண்டு நெதர் பீல்ட்டுக்கு திரும்பவில்லை என்று தெரிவித்தார். ஹார்லோட் திருமணத்தை ஜேன் ஆமோதித்தார். அவள் நிலைமை வேறு. நாம் அதைக் கருத



வேண்டும் என்கிறாள். ஜேன் நிலைமை எல்லோராலும் பேசப்பட்டது. **Mr.** பென்னட் இது வழக்கம் தானே என்றார். எலிசபெத்தை நோக்கி உனக்கு விக்காம் மீது பிரியம். ஒரு நாள் அவனும் உன்னை ஏமாற்றுவான் என்றார். இந்த நாட்களில் அடிக்கடி விக்காம் எலிசபெத்தை சந்திப்பது அவனுக்கு இதமாயிருந்தது. விக்காம் சொல்லும் பொய் எங்கும் பரவி டார்சிக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது.

## Chapter 2:

காலின்ஸ் லாங்பார்னை விட்டுப் புறப்பட்டார். Mr. & Mrs. கார்டினர் குழந்தைகளுடன் வந்தார். Mrs. கார்டினர் பிங்லியை பற்றித் தெரிந்து கொண்டு ஜேனைத் தன்னுடன் இலண்டனுக்கு வரும்படி அழைத்தார். எலிசபெத் விக்காமுடன் பழகுவதைக் கண்டவர், அவளை எச்சரிக்க நினைத்தார்.

## Chapter 3:

பணமில்லாதவர் எலிசபெத் விக்காமை ஏற்கக் கூடாது என்றார். ஷார்லோட் எலிசபெத்தை தன்னூருக்கு வரும்படி அழைத்தாள். ஜேன் இலண்டனிலிருந்து கரோலினைப் பார்த்ததாகவும், கரோலின் தன்னை வந்து பார்த்ததாகவும், பிங்லிக்கு தான் அங்கிருப்பது தெரிந்தும் வந்து பார்க்கவில்லை எனவும் எழுதினாள். விக்காம் இதனிடையே மிஸ் கிங் என்ற பெண்ணுக்கு £10,000 வந்தது என அறிந்து அவளை நாடினான்.

## Chapter 4:

அடுத்த இரண்டு மாதங்கள் – ஜனவரி, பிப்ரவரி கழிந்தன. மார்ச்சில் எலிசபெத் ஷார்லோட் வீட்டுக்குப் போக வேண்டும். எலிசபெத் வழியில் இலண்டனுக்குப் போய் ஒரு நாள் ஜேனுடன் தங்கிவிட்டுப் போகிறாள். கரோலின் வீட்டுக்கு வந்த விபரம் அறிந்தாள். ஆனால் இனி பிங்லியை எதிர்பார்க்க முடியாது என அறிந்தாள். கரோலின் வீட்டுக்கு ஜேன் போய் வந்ததும், பிங்லியை

சந்திக்க முடியாததும் எலிசபெத் அறிந்தாள். Mr. கார்டினர் Lake districtக்கு summer tour போவதாகவும், எலிசபெத் வரவேண்டும் எனவும் கூறினார்.

## Chapter 5:

எலிசபெத் சர்வில்லியம் மரையாவுடன் ஷார்லோட் வீட்டை அடைகிறார். காலின்ஸ் வீட்டையும், தோட்டத்தையும், அங்குள்ள மேஜை நாற்காலிகளையும் அசட்டுத்தனமாக வர்ணித்து, லேடி காதரீனை வாயாரப் புகழ்ந்து அறிமுகத்தை முடித்தார். மறுநாள் லேடிகாதரீன் மகள் வண்டியில் ஷார்லோட் வீட்டெதிரில் நிற்பதை எலிசபெத் பார்த்து டார்சிக்குப் பொருத்தமான பெண் எனக் கேலியாக நினைக்கிறார். அவள் உடல் நலமில்லாதவள்.

## Chapter 6:

காலின்ஸ் எலிசபெத்தையும் சர்வில்லியம்ஸ், மரையாவுடன் ஷார்லேட்டை லேடி காதரீன் வீட்டிற்கு அழைத்தப் போகிறான். லேடி காதரீன் எலிசபெத் அழகான உயர்குடிப் பெண் என்று கூறுகிறாள். அவளுடைய குடும்பத்தைப் பற்றியும், அவள் வயதையும் கேட்கிறாள். எலிசபெத் தெளிவாகப் பேசுவது லேடி காதரீனுக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவுமிருக்கின்றது.

## Chapter 7:

சர்வில்லியம் மகளுடன் ஒரு வாரமிருந்தாள். மகளுடைய வசதியும், அந்தஸ்தும் அவர் மனதை நிறைத்தன. இருவாரம் கழித்து டார்சி சின்னம்மா வீட்டிற்கு கர்னல் பீட்ஸ் வில்லயத்துடன் வருகிறான். இவன் டார்சிக்கு ஒன்றுவிட்ட அண்ணன் ஜார்ஜியானாவுக்கு டார்சியுடன் கார்டியன். டார்சி எலிசபெத்தைப் பார்க்க வருகிறான். ஏற்கனவே ஷார்லோட் டார்சியின் கவனத்தை அறிவாள். டார்சி தனக்காக வீட்டிற்கு வரவில்லை. உனக்காகவே வருகிறான். என்று எலிசபெத்திடம் கூறுகிறார். என் தமக்கை



இலண்டனில் 3 மாதமிருந்தாள். நீங்கள் சந்தித்தீர்களா? என டார்சியை எலிசபெத் கேட்கிறாள். பீட்ஸ்வில்லியம் எலிசபெத்தின் தெளிவான உரையாடலை பெரிதும் ரசிக்கிறான்.

## Chapter 8:

மீண்டும் எலிசபெத் டார்சியையும் பீட்ஸ் வில்லியத்தையும் லேடி காதரீன் வீட்டில் சந்திக்கிறாள். ஆர்வமாக டார்சி அவள் பாடும் பொழுது அருகில் வருகிறான். டார்சி நெதர் பீல்டில் நடனம் ஆட மறுத்ததை பீட்ஸ் வில்லயத்திடம் கூறுகிறார். தனக்கு பேசத் தெரியலாது என டார்சி அவனிடம் ஒப்புக் கொள்கிறான். லேடி காதரீன் மகள் மீது டார்சிக்கு அபிப்பிராயமில்லை என எலிசபெத் புரிந்து கொள்கிறாள்.

## Chapter 9:

மறுநாள் எலிசபெத் தனியாக அறையிலுள்ள பொழுது டார்சி வருகிறான். அனைவரும் இருப்பதாக நினைத்து வந்தவன் அவளைத் தனியாகக் காண்கிறான். இருவரும் சங்கடப்படுகின்றனர். பிங்லி, நெதர் மீல்ட், ஷார்லோட்டைப் பற்றி சிறிது நேரம் பேசிவிட்டுப் போகிறான். உன் மேல் டார்சிக்குக் காதல் என்பதில் எனக்கு சந்தேகமில்லை என்கிறாள் ஷார்லோட். எலிசபெத் டார்சியை மணக்க வேண்டும், இல்லையெனில் பிட்ஸ் வில்லயமை மணக்கவேண்டும் என ஷார்லோட் கருதுகிறான்.

## Chapter 10:

வீட்டுக்கு அருகேயுள்ள பார்க்கில் எலிசபெத் உலாவும் பொழுது பல முறை சந்திக்கிறார். ஒரு நாள் பிட்ஸ் வில்லியத்தை சந்தித்துப் பேசும் பொழுது பிங்லியைப் பற்றிக் கேட்கிறாள். டார்சி பிங்லியை ஒரு மோசமான திருமணத்திலிருந்து காப்பாற்றினேன் என்ற செய்தி அவனுக்கு தலையை சுற்றியது.

## Chapter 11:

வீட்டிற்குத் திரும்பி மனப்பாரத்தைக் குறைக்க ஜேன் கடிதங்களை எலிசபெத் படிக்கும் பொழுது டார்சி வருகிறான். தணியாத தன் காதலை வெளியிடுகிறான். தன்னை மணக்கும்படி கேட்கிறான். உன் குடும்பம் மட்டமானது, என்றாலும் என் ஆர்வம் என்னை மீறுகிறது என்றவுடன் அவளுக்குக் கோபம் வருகிறது. தமக்கையை சீரழித்தவனை எப்படி மணப்பேன் என்கிறாள். தான் திருமணத்தைத் தடை செய்ததை ஒப்புக் கொள்கிறான். அது சரியான செயல், அதற்காக தான் வருத்தப்படவில்லை என்றவுடன் அவளுக்கு அதிகக் கோபம் வருகிறது. விக்காமுக்கு இழைத்த அநீதி பெரிதல்லவா எனக் கேட்கிறாள். அது டார்சிக்குப் பொறுக்கவில்லை. ஏன் தான் அவள் மறுத்தாள் என மீண்டும் கேட்கிறான். உனது சுயநலம், கர்வம், மரியாதையில்லாமல் பழகுவது எல்லாம் தயையாக இருக்கிறது என்கிறார். மனம் புண்படுகிறான். அவளை வாழ்த்திவிட்டு போகிறான்.

## Chapter 12:

நீண்ட கடிதம் எழுதி மறுநாள் அவனிடம் தருகிறான். விக்காம் சொன்ன பொய்கள், பெற்ற பணம் *(3000)*, தங்கையைக் கடத்த முயன்றது, தன்னுடைய நேர்மை, ஜேன் விஷயம், அதில் பிங்லியிடம் ஜேன் இலண்டனில் இருப்பதை மறைத்தது ஆகியவற்றை விளக்கி எழுதினான். மறைத்தது தவறு, தடுத்தது சரி என்றான். இத்தனை பெரிய மனிதன் மனதில் தன் மீது காதல் உண்டானது அவளுக்கு ஆச்சரியமாக இருக்கின்றது.

## Chapter 13:

டார்சி கடிதத்தில் என்ன எழுதியிருப்பான் என அவளால் யூகிக்க முடியவில்லை. ஆர்வமாகக் கடிதத்தைப் படித்தாள். எதுவும் மனதில் பதியவில்லை. என்ன படித்தோம் எனத் தெரியவில்லை. பதைபதைப்பும் கோபமும் வந்தது. விக்காமைப் பற்றியவை மனம் ஏற்கவில்லை.



ஜேனைப் பற்றியவை மனத்தை இரணமாக்கின. ஆத்திரம் அடங்கிய பின் டார்சி சொன்னவை, தாயார், தங்கைகள் நடந்தது மனக் கண்முன் வந்து ஜேன் திருமணத்தைத் தடுத்தது டார்சியில்லை, தன் குடும்பம் என்று உணர்ந்தாள். விக்காம் நடத்தையை இப்பொழுது நினைத்துப் பார்த்தால், அதிலுள்ள பொய், தில்லுமுல்லு தெரிய வருகிறது. ஜேனைப் பற்றி ஷார்லோட் சொன்னதும், தன் குடும்பத்தாரின் நடத்தையும் அவள் மனத்தைப் புண்படுத்தின. அவள் வெட்கப்பட்டாள். வீண் பெருமைக்குத் தான் பலியானது தெரிந்தது. அத்துடன் வீட்டிற்கு வந்தபொழுது டார்சி ஊருக்குப் போகும் முன் அவளிடம் விடைபெற வந்து அவளில்லை என்பதால் போய் விட்டதாக அறிந்தாள்.

## Chapter 14:

எலிசபெத் காலின்ஸ் குடும்பத்தாரோடு மீண்டும் லேடி காதரீனைப் பார்க்கப் போகிறாள். எலிசபெத், மேலும் ஒரு மாதம் தங்கினால், தன்னுடன் இலண்டன் அழைத்துப் போவதாக காதரீன் கூறியதை எலிசபெத் ஏற்கவில்லை. டார்சி கடிதம், விக்காமைப் பற்றிய விவரங்கள், பிங்கிலியின் பிரியம் ஆகியவை எலிசபெத் ற்கு மனப்பாடமாயின. அவள் ஊர் திரும்புகிறாள்.

## Chapter 15:

மரையாவும், எலிசபெத்தும் ஊர் திரும்புகிறார்கள். வழியில் இலண்டனில் ஜேனும் உடன் வருகிறாள்.

## Chapter 16:

மூன்று பெண்களும் இலண்டனிலிருந்து வந்து வழியில் ஒரு ஹோட்டலில் லிடியா, கிட்டியை சந்தித்து தங்கள் வீட்டு வண்டியில் ஊர் திரும்புகின்றனர். மிஸ் கிங் லீவர் பூல் போய்விட்டதாகவும் விக்காம் அவளை மணக்க முடியாது எனவும் தெரிவிக்கிறாள். தகப்பனுக்கு ஜேனும், எலிசபெத்தும் வந்தது திருப்தி. அனைவரும்

பிரைட்டனுக்குப் போக வேண்டும் என வீடு லிடியாவால் அமர்க்களப்படுகிறது.

## Chapter 17:

வீடுவந்து சேர்ந்ததும், எலிசபெத் ஜேனிடம் டார்சி கூறியதை எடுத்துச் சொன்னாள். பிறகு டார்சி கடிதத்தில் விக்காமைப் பற்றி எழுதியிருந்ததைக் கூறினாள். ஜேனுக்கு ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. விக்காமைப் பற்றிய உண்மையை வெளியில் சொல்வதா, இல்லையா எனக்கருதி, இருவரும் அது தேவையில்லை என முடிவு செய்தனர். ஓரளவு எலிசபெத் மனம் அங்க தாயார் பிங்லி விஷயத்தை எலிசபெத்திடம் பேசிக் குறைப்பட்டாள்.

## Chapter 18:

மெரட்டனிலிருந்து இராணுவ முகாம் பிரைட்டனுக்கு மாறுவது இளம் பெண்கட்கு ஏமாற்றமாக இருந்தது. குடும்பம் முழுவதும் பிரைட்டனுக்குப் போக வேண்டும் என்பது தாயார் விருப்பம். தகப்பனார் மறுத்துவிட்டார். கர்னல் பார்ஸ்டர் மனைவி லிடியாவை அழைத்திருந்தாள். தன்னையும் அழைக்கவில்லை என கிட்டி அழுதாள். லிடியாவை அனுப்பக்கூடாது என எலிசபெத் தகப்பனாருடன் வாதாடினாள். விக்காமைப் பற்றி தானறிந்ததை அவரிடம் கூறாமல் கேட்டாள். ஒன்றும் தவறு வராது என தகப்பனார் லிடியாவை பிரைட்டனுக்கு அனுப்பினார். எலிசபெத் விக்காமை சந்தித்த பொழுது விக்காம் டார்சி, லேடி காதரீன் ஆகியவரைப் பற்றி விசாரித்தான். டார்சியைப் பற்றி தன் மனம் ஓரளவு மாறியதாக எலிசபெத் கூறினாள்.

## Chapter 19:

தகப்பனார் இளமை, அழகு, விருவிருப்பால் கவரப்பட்டு அறிவில்லாத பெண்ணை மணந்தார். எலிசபெத் இதை நன்கு



அறிவாள். விக்காம் ஊரைவிட்டுப் போய்விட்டான். Mrs. கார்டினருடன் Lake Estateக்குப் போனது பெரிய சந்தோஷம். Mr. & Mrs. கார்டினர் வந்தனர். Lake Estates வரை போக முடியாது, டார்பிஷயர் வரை போகலாம் என்றது ஏமாற்றமாயிருந்தது. பிரபிஷயர் வந்தனர். பெம்பர்லி 5 மைலில் இருப்பதை அறிந்து அங்கு போகலாமா என எலிசபெத்தைக் கேட்டனர். பெம்பர்லியில் டார்சி குடும்பத்தினரில்லை எனக் கேள்விப்பட்டு மெப்பர்லியைப் பார்க்க எலிசபெத் சம்மதித்தாள்.

# Vol III

## Chapter 1

பெம்பர்லியை தூர இருந்து பார்த்தவுடன் எலிசபெத்திற்கு மூச்சே நின்றுவிட்டது. **Mrs.** ரெய் ல்ஸ் அனுமதியுடன் உள்ளே சென்று பார்க்கும் பொழுது ஒரு ஜன்னலருகே நின்று எலிசபெத்திடம் அரண்மனை போலிருப்பதையும் ஜன்னல் வழித்தெரியும் காட்சியின் உயர்வையும் கண்டு, நான் இந்த வீட்டுக்கு தலைவியாக இருந்திருக்கலாம் என நினைக்கிறார். அங்கு விக்காம் படம் உண்டு. அதைப் பார்த்து பெயனால்ஸ் இவன் மானேஜர் மகன். ராணுவத்தில் சேர்ந்து தறுதலையாகி விட்டான் என்றார். டார்சியைப் போன்ற இனிமையான முதலாளியில்லை என்றார். இருவரையும் பற்றி கார்டினர் கேள்விப்பட்டது வேறு. எலிசபெத் இவள் பேச்சை நம்பக் கூடாது என்றாள். பெம்பர்லியைப் பார்த்துவிட்டு வெளியே வந்தவுடன் டார்சி கண்ணில்படுகிறார். டார்சிக்கு தூக்கிவாரி போட்டது. எலிசபெத்திற்குத் தாங்கவில்லை. டார்சி இவளுடைய பெற்றோர்களை விசாரித்தாள் தூரத்திலிருந்து நமு். நமுள். கார்டினர் கவனித்தனர். விடைபெற்று டார்சி சென்றான். நமு். நமுள் கார்டினர் அவன் உருவத்தையும் நயமான பழக்கத்தையும் புகழ்ந்தனர். எலிசபெத் டார்சியின் மாறிய பழக்கம் தனக்குப் புதியது என்றாள். மிண்டும் டார்சி எங்கிருந்தோ எதிரில் வந்தான். Mr. Mrs. கார்டினரை அறிமுகப்படுத்த வேண்டினான். தான் ஒருநாள் முன்னதாக

எதிர்பாராமல் வந்ததாகக் கூறினான். மறுநாள் பிங்லி தங்கைகளுடன் வருவதாகக் கூறினான், தங்கைகள் ஜியானாவை எலிசபெத்திற்கு அறிமுகப்படுத்த அனுமதி கேட்டான். நம். கார்டினரை எஸ்டேட்டில் மீன் பிடிக்க அழைத்தான். வீட்டுக்குள் வந்து சாப்பிட அழைத்தான். அவள் மறுத்துவிட்டான். வண்டிவரை வந்து அவர்களை வழியனுப்பினான்.

## Chapter 2:

எலிசபெத் டார்சியை தங்கயுடன் மறுநாள் எதிர்பார்த்தாள். அவன் அன்றே வந்துவிட்டான். தங்கையை எலிசபெத்திற்கு அறிமுகப்படுத்தினான். உடன் பிங்லி வந்திருந்தான். பிங்லி ஆர்வமாக எலிசபெத்துடன் பேசினான். ஜார்ஜியானா எலிசபெத்தையும் Mr. Mrs. கார்டினரையும் பெம்பர்லிக்கு விருந்துக்கு அழைத்தாள். Mr. Mrs. கார்டினருக்கு டார்சிக்கு எலிசபெத் மீது அளவு கடந்த காதலிருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது. இது விக்காம் பிறந்த இடமாதலால் அனைவரும் அவனை அறிவர். எங்கு பார்த்தாலும் கடனாகி, அக்கடனை எல்லாம் டார்சி கொடுத்ததாகக் கேள்விப்பட்டனர்.

## Chapter 3:

இப்பொழுதுதான் எலிசபெத்திற்கு ஏன் கரோலின் தன்னை வெறுக்கிறாள் எனப்புரிந்தது. டார்சி தன்னை விரும்புவதால் கரோலின் பொறாமைப்படுவதை இப்பொழுது எலிசபெத் அறிந்தாள். எலிசபெத்துடன் நம். நம்ள். கார்டினர் பெம்பர்லிக்கு வந்தபொழுது அங்கு டார்சியில்லை. பிங்லியின் சகோதரிகளிருந்தனர். பிங்லியின் சகோரிகள் வரவேற்றனர். ஆனால் பேசவேயில்லை. டின்னர் வந்தது. பேசாமல் அனைவரும் சாப்பிட்டனர். டார்சியும் மற்றவர்களும் வந்தனர். கரோலின் மட்டும் இராணுவம் மெரிட்டனிலிருக்கிறதா. உங்கள் குடும்பத்திற்கு ராணுவம் போய்விட்டால் பெரிய கஷ்டமல்லவா? என எலிசபெத்தைக் கேட்டாள். எலிசபெத்



நிதானமாக இருந்தாள். எலிசபெத்தும் மற்றவர்களும் போனபின் கரோலின் டார்சியிடம் எலிசபெத்தை குறைவாகப் பேசினாள். அவள் நீண்ட விமர்சனம் முடிந்தபின் டார்சி எலிசபெத் என் கண்ணுக்கு மிக அழகானவள் என்றான்.

## Chapter 4:

எலிசபெத் ஜேனிடமிருந்து எதிர்பார்த்த கடிதம் வரவில்லை. விலாசம் தவறி தாமதமாக அடுத்த கடிதத்துடன் வந்தது. Mr. Mrs. கார்டினர் சர்ச்க்குப் புறப்பட்டனர். எலிசபெத் அறையில் கடிதங்களைப் படிக்கத் தங்கிவிட்டாள். கடிதம் லிடியா விக்காமுடன் ஓடிப் போனதைப் பற்றியது. படித்துப் பதறினாள். உடனே புறப்பட வேண்டும். டார்சி வந்து நிலையை அறிந்து வருந்தி, தன் வீட்டிற்கு வருவது தவறியது பற்றி வருந்தி திரும்பப் போகிறான். மாமாவும் மாமியும் வந்தவுடன் ஊர் திரும்புகிறாள். திரும்புமுன் மாமி பெம்பர்லிக்குப் போவது என்னாவது என்ற பொழுது நான் டார்சியிடம் விபரம் கூறிவிட்டேன் என்கிறாள். அந்த அளவு நெருக்கம் இருப்பது மாமிக்குப் புரிந்தது.

## Chapter 5:

விக்காம் லிடியாவுக்கு ஊறு செய்ய முடியாது. அப்பெண் கர்னல் வீட்டில் தங்கியிருக்கிறாள். மேலும் அவள் ஆதரவில்லாவளில்லை எனக் கார்டினர் எலிசபெத்திடம் கூறுகிறார். மெரிட்டன் வந்து சேருகின்றனர். Mrs. பென்னட்டி புலம்புகிறார். Mr. பென்னட் இலண்டனிலிருந்து இன்னும் வரவில்லை. ஜேன் லிடியா கர்னல் மனைவிக்கு எழுதிய கடிதத்தை எலிசபெத்திடம் தருகிறாள்.

## Chapter 6:

காலின்ஸ் துக்கம் விசாரித்து பென்னட்டிற்கு கடிதம் எழுதுகிறார். விக்காம் சூதாடி, ஏராளமாகக் கடன் வாங்கியுள்ளாள் என்று கர்னலிடமிருந்து தான் பெற்ற செய்தியை கார்டினர் லாங்பார்னுக்கு எழுதினார். Mr. பென்னட் இலண்டனிலிருந்து திரும்புகிறார்

## Chapter 7:

Mr. பென்னட் திரும்பிய இரண்டு நாள் கழித்து லிடியாவையும், விக்காமையும் தான் சந்தித்து, லிடியாவை வீட்டிற்கு அழைத்து வந்ததை Mr. கார்டினர் எழுதுகிறார். லிடியாவுக்கு £ 100 சீதனம் தருவதாகவும், ஆண்டுக்கு £ 100 கொடுத்து, அவன் கண்களை அடைத்து, திருமணம் ஏற்பாடு செய்ததைக் கடிதம் கூறுகிறது. விக்காம் இராணுவத்தில் வடபகுதிக்கு நியூகேசிலுக்கு போவதாகவும் அழைத்தால் மெரிட்டன் வருவதாகவும் கடிதம் கூறிற்று. நழ். பென்னட் எலிசபெத்தின் சொல்லைப் பாராட்டுகிறார் – லிடியாவை அனுப்பவேண்டாம்.

## Chapter 8:

£10,000 பவுனுக்குக் குறையாமல் கார்டினர் விக்காமுக்குக் கொடுத்திருக்க வேண்டும். எப்படி தான் அதைத் திருப்பித்தர முடியும் என Mr. பென்னட் எலிசபெத்திடம் குறைப்பட்டுக் கொள்கிறார். லிடியா திருமணத்தை அறிந்த எலிசபெத் ஏன் இதை டார்சியிடம் கூறினோம் என வருத்தப்பட்டார்.

## Chapter 9 & 10:

லிடியா லாங்க்பார்ன் வரக்கூடாது என்ற முடிவை நழ். பென்னட் பெண்கள் வேண்டுகோளால் மாற்றி அவர்களை அழைக்கிறார் பெண்ணோ மாப்பிள்ளையோ வெட்கப்படவில்லை. டார்சி திருமணத்திற்கு வந்திருந்ததை வாய் தவறி லிடியா உளறிவிட்டு பாதியில் நிறுத்திக் கொள்கிறாள். எலிசபெத் மாமிக்கு விபரம் கேட்கிறார். டார்சி விஷயத்திலிருந்து வந்து விக்காமைக் கண்டுபிடித்து, பணம் கொடுத்து, மிரட்டி கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வேலை வாங்கிக் கொடுத்த விபரத்தை மாமி எலிசபெத்துக்கு எழுதுகிறார். எலிசபெத் அக்கடிதத்தை வீட்டிற்கு வெளியே உட்கார்ந்து படித்தபொழுது விக்காம் வந்து பேசுகிறான். டார்சியை பார்த்ததாகக் கூறுகிறார். பிர்பிஷயரில் தன் சர்ச்சயைப் பார்த்தாயா



எனக் கேட்கிறான். எலிசபெத் அவன் சர்ச்சில் பாதிரி வேலையை மறந்து பணம் பெற்றதை அறிவேன் என்கிறாள்.

## Chapter 11:

பிங்லி நெதர் பீல்ட் வந்த செய்தி நழ்ள். பென்னட்டிற்கு வருகிறது. Mrs. பென்னட் மீண்டும் கணவனை பிங்லியைப் பார்க்க வேண்டும் என்கிறார். அவர் மறுத்துவிடுகிறார். பிங்லியும், டார்சியும் லாங்பார்ன் வருகிறார்கள். லிடியா திருமணத்தை Mrs. பென்னட் பிங்லியும் கூறுகிறாள். தன் வீட்டில் சாப்பிட அழைக்கிறார்.

## Chapter 12:

டார்சி வந்தவன் தன்னுடன் பேசவில்லை என எலிசபெத் பொருமுகிறார். மீண்டும் டார்சி வந்தபொழுது எலிசபெத்தால் பேசமுடியவில்லை. உங்கள் தங்கை பெம்பர்லியிருக்கிறாளா? என மட்டும் கேட்க முடிந்தது. ஜேன் மீண்டும் சந்தோஷமாகிவிடுகிறாள்.

## Chapter 13:

சில நாள் கழித்து பிங்லியிடம் வருகிறான். நழ்ள். பென்னட் ஜேனைத் தவிர மற்ற பெண்களை அழைத்துக் கொண்டு போகிறாள். பிங்லி தன்னை மணக்கும்படி ஜேனைக் கேட்கிறான். வீடே சந்தோஷத்தால் ஆரவாரமாகிறது.

## Chapter 14:

சில நாள் கழித்து லேடி காதரீன் வந்து எலிசபெத்தை டார்சியை மணக்கக் கூடாது எனக் கண்டிக்கிறார். அவள் மறுத்துவிடுகிறாள்.

## Chapter 15:

காலின்ஸ் பென்னட்டிற்கு எலிசபெத் டார்சியை மணக்கக் கூடாது என எச்சரித்துக் கடிதம் எழுதுகிறார்.

## Chapter 16:

கொஞ்ச நாளில் டார்சி, பிங்லியுடன் லாங்க் பார்ன் வருகிறார். உலாவப் போன பொழுது எலிசபெத் லிடியாவைப் பற்றி தான் அறிந்தவற்றிற்கு மனமார நன்றி செலுத்துகிறாள். டார்சி தனக்கு வந்த மனமாற்றத்தை விவரவமாகக் கூறி, எலிசபெத்தை மணக்கும்படிக் கேட்கிறார். அவள் சம்மதிக்கிறாள்.

## Chapter 17:

ஜேனிடம் எலிசபெத் டார்சியைப் பற்றிக் கூறியதை அவள் நம்பவில்லை. அதே போல் தந்தையும் நம்பவில்லை. விபரம் தெரிந்தால் நம்புகிறார்கள். லிடியாவுக்கு டார்சி செய்ததை எலிசபெத் இருவரிடமும் விளக்குகிறார்.

## Chapter 18:

Mrs. கார்டினருக்கு எலிசபெத் டார்சி தன்னை மணக்க இருப்பதை எழுதுகிறார்.

## Chapter 19:

இரு திருமணங்கள் நடந்தன. Mrs. பென்னட் எலிசபெத் திருமணமறிந்து வாயடைத்துப் போனாள். லேடி காதரீன் கோபம் அடங்க நாளாயிற்று. கரோலின் தலைகீழே மாறிவிட்டாள். ஜார்ஜியானா எலிசபெத்தை கொண்டாள். 1 வருஷம் கழித்து பிங்லி பெம்பர்லிக்கு அருகே ஒரு எஸ்டேட் வாங்கினார். கிட்டி ஜேன், எலிசபெத்துடன் நாட்களைக் கழிக்கிறாள். அடிக்கடி பென்னட் எலிசபெத்தைப் பார்க்க வருகிறாள். கடைசிவரை எலிசபெத் விக்காமுக்கு பணம் அனுப்புகிறாள்.

❊ ❊ ❊



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - அப்படியானால் நாம் ஷேக்ஸ்பியர், ஜன்ஸ்டீன் போலாகலாம் என்று பொருளன்று, இல்லையா?

அண்ணன் - ஷேக்ஸ்பியர் உலகுக்குச் செய்ததை அருள் நமக்குச் செய்யும். நம் வாழ்வைப் பொருத்தவரை அது போன்ற உயர்வு அருளால் நமக்குக் கிடைக்கும்.

தம்பி - இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தைப் பிரித்துச் சொன்னால் நல்லது.

அண்ணன் - தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவனைக் காப்பாற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்குத் தான் உண்டு.

தம்பி - ஒருவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால் அவருடைய பிரார்த்தனை ஜனாதிபதி மட்டும் அவருக்குச் செய்யக் கூடியதைச் செய்யும்.

அவருடைய வாழ்வில் ஜனாதிபதியின் அதிகாரம் போல் அருள் செயல்படும். அது அவரே ஜனாதிபதியாவது அன்று. அவர் வாழ்வில் ஜனாதிபதி செயல்படுவது போன்றது. அப்படியா?

அண்ணன் - ஷேக்ஸ்பிர் பாத்திரங்களை அமரராக்கினார். நம் கற்பனையை அருள் அமரராக்குகிறது. அதனால் பலிக்கிறது. பாத்திரங்கள் அமரரத்துவம் அடைவது போல் நம் கற்பனை அமரத்துவம் அடைகிறது.

தம்பி - இது முக்கிய வித்தியாசம். நாம் இப்படிச் சொன்னால், தாமே ஷேக்ஸ்பியராகலாம் எனப் புரிந்து கொள்வார்கள்.

அண்ணன் - அங்கும் ஓர் உண்மையிருக்கிறது. ஷேக்ஸ்பியர் பாத்திரங்கள் அமரராக்கியது போல் அருள் நம் கற்பனைத் திட்டத்தை அமுலாக்குவது, திட்டம் அமரத்துவம் பெறுவதாகும்.

தம்பி - அருளை நான் இதுவரை இப்படிப் புரிந்து கொள்ளவில்லை.

அண்ணன் - எல்லாத் துறைகளிலும், எல்லா அன்பர்கட்கும், எல்லா விஷயங்களிலும், அருள் வழங்குவது அமரத்துவம். நம் நிலை தாழ்ந்திருப்பதாலும், சூழ்நிலை பொய்யால் நிறைந்திருப்பதாலும், ஒரு சமயம் மட்டும் நமக்குப் பலன் வருகிறது. நமக்குப் பலன் மட்டும் முக்கியம் என்பதால் அதனுள் பொதிந்துள்ள ஆன்மீகச் சூட்சுமத்தை நாம் அறிய முற்படுவதில்லை.

தம்பி - அன்னை எனில் அமரத்துவம், ஆனந்தம் என்றாகிறது. ஆனால் அது பொய் சொல்லாதவருக்கு மட்டும் என்கிறீர்களே.

அண்ணன் - பொய்யிடம் அருள் வாராது. பிரார்த்தனைக்குரிய பலன் மட்டும் அப்பொழுது கிடைக்கும்

தம்பி - நாமெல்லாம் பொய்யே சொல்ல மாட்டேன் என்று பொய் சொல்பவர்கள்.

அண்ணன் - பிரார்த்தனையை மெய்யாகச் செய்வதால் தான் பலிக்கிறது. பிரார்த்தனை முடிந்தால் பழைய பழக்கம் வருகிறது. கற்பனை (imagination) என்பது பெருந்திறன். இறைவனுடைய கற்பனையால் காலம் எழுந்தது. மனிதனுடைய கற்பனையால் எதிர்காலம் எழுகிறது. கற்பனையின் திறன் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. நாம், வழக்கில், கற்பனைக் கோட்டை (fantasy) என்பதைக் கற்பனை என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம். எதிர்காலத்தில் நடக்க இருப்பதை உருவகப்படுத்தும் திறன் கற்பனை என்கிறார் பகவான்.



கற்பனை, கற்பனைக் கோட்டையாக இல்லாவிட்டால், எதிர்காலத்தை நிர்ணயிக்கும்.

தம்பி - நமது கற்பனை பலிக்க நாம் நம் திறமையை நம்புகிறோம்.

அண்ணன் - நமது திறமையை நம்புவதைவிட அன்னையை நம்பினால், அவர் அருளை நம்பினால் பலன் அதிகம். அது, முன் சொன்னது போல், இருவகையாக நடக்கிறது.

1. நம் திறமைக்கு வெற்றி, தோல்வியுண்டு. அருளுக்கு வெற்றி மட்டும் உண்டு.

2. கற்பனை உண்மையாக மட்டும் இருந்தால், அக்காரணத்தால், மனிதனின் சிறு செயல், தெய்வத்தின் பெரிய செயலாக மாறுகிறது. (Finite into infiite) கற்பனையைப் பூர்த்தி செய்த அருள் அத்துடன் நிற்பதில்லை (mother begins where man ends) தொடர்ந்து முன்னேற்றம் எழும். அது முடிவற்றது.

தம்பி - மனித செயலைத் தெய்வச் செயலாக மாற்றும் உபாயம் என்றே இதைக் கூறலாம். கற்பனைக்கு பகவான் சிருஷ்டித் திறனளிக்கிறார். கற்பனை உண்மையாக இருந்தால், இயற்கை (becoming) செயல்படுவதற்குப் பதிலாக (Being in the Becoming) அதனுள் உள்ள

சைத்தியப் புருஷன் (ஆன்மா) செயல்படுகிறான். வாழ்வு, யோகமாக மாறுகிறது எனலாம்?

அண்ணன் - அதுவும் சரியாகப்படுகிறது. இந்தியத் தத்துவ மரபு, யோக மரபின் சிறப்பை பகவான் குறிப்பிடும் பொழுது இறைவனின் இவ்விரு நிலைகளைக் (Being, Becoming) குறிப்பிடுகிறார். விஞ்ஞானி ஒன்றை மட்டும் கருதுவதால் விஞ்ஞானம் வழி தவறுகிறது எனவும் கூறுகிறார்.

தம்பி - குடும்பம் நடத்தும் அன்பர், இடைவிடாது அன்னை அவன் வாழ்வில் செயல்பட நிதானம், பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும் என்பதன் மூலம் (Being) இறைவனின் முதல் நிலையை பகவான் வாழ்வில் கொண்டு வருகிறார்.

அண்ணன் - நடைமுறையைக் கருதும் குடும்பஸ்தன் படபடப்பாக இருக்கிறான். படபடப்பு வேண்டாம் என்பவன் துறவியாகிறான். படபடப்பு இல்லாவிட்டால் குடும்பம் நடத்துவது யோக வாழ்வு என்கிறார் பகவான். இறைவனை வாழ்வில் செயல்பட வைப்பது யோக வாழ்வாகும்.

தம்பி - அதற்கு பகவான் விதிக்கும் நிபந்தனை கசக்கிறது. எதிரியை நண்பனாகவும், வெறுப்பை விருப்பமாகவும், நம்மை அழிக்க வருபவனை ஆக்க புருஷனாகவும் கருத வேண்டும் என்பது கசப்பான நிபந்தனை.

அண்ணன் - அதுவே Life Divineஇல் முதல் அத்தியாயம். அதுவே முடிவான ஞானம். துறவி தேடுவது ஆத்ம ஞானம். பூரணயோகி நாடுவது முடிவான ஞானம். ஆத்ம ஞானம்



மோட்சம் தரும். முடிவான ஞானம் வாழ்வில் பூரணம் தரும்.

தம்பி - மனிதன் குறையுடையவன். மனிதன் அன்பனானால், நிறைவுடையவனாகிறான். தன்னை நம்பி வாழும் மனிதன் அன்னையை நம்பி வாழ்ந்தால் நிறைவு பெறுகிறான்.

*தொடரும்..*

❊ ❊ ❊

**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about Malarndha Jiviyam (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Pondicherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** Integra, 51, II cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** 12, I Cross, Venkata Nagar, Pondicherry 605 012. |
| 5. | Editor's Name | : | **Karmayogi** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Plot 4, Venkata Nagar extn., Pondicherry 605 012 |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,** Plot 4, Venkata Nagar Extn., Pondicherry 605 011. |

I, (P.V. Balakrishnan) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

Date : 01-03-2001

**(P.V. BALAKRISHNAN)**
Signature of the Publisher.

## உண்மை முழுமையில் இருக்கிறது பகுதியில் இல்லை.

முழுமை என்பது காலத்தைக் கடந்தது. உண்மை, சத்தியம் என்பதும் காலத்தைக் கடந்தது என்பதால் உண்மை முழுமையில் உறைகிறது. காலம் பகுதி, சத்தியம் முழுமை, குறுகிய காலம் சிறிய பகுதி. நெடுங்காலம் பெரிய பகுதி. எனவே உண்மை குறுகிய காலத்தை விட நெடுங்காலத்தில் உறைகிறது. இன்றைய வசதி உண்மையில், நெடுநாள் நீடிக்கக் கூடியது உண்மையாகும்.

வீடு என்பதை முழுமை எனக் கொண்டால், குடும்பம் முழுமை, சுயநலம் பொய். தான் முதல் என்பது பொய். குடும்பம் முதலில் என்பது மெய். குடும்பம் ஜாதியின் பகுதி. ஜாதி முதலில் என்பது உண்மை. என் குடும்பம் என்பது பொய். ஜாதி ஊரில் ஓர் பகுதி. ஊர் உண்மை, ஜாதி பொய். உலகத்தில் ஊர் பகுதி. உலகம் உண்மை.

> **பகவான் முழுமையை நாடினார். அவர் நாடிய முழுமை இன்று உலகத்திலில்லாதது. மனிதன் கேள்விப்படாதது. இல்லறமும், துறவறமும் சேர்ந்த முழுமை வாழ்வென்றார்.**

இல்லறத்தை எப்படி நடத்துவது என்பது உலகறிந்தது. துறவியின் பெருமையை உலகம் அறியும். இல்லறமும், துறவறமும் எதிர்முனைகள். நீரும், நெருப்பும் எதிரிகள். அவை சேர வழியில்லை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் அதற்குரிய வழியைக் கண்டார். அந்த வழி முழுமை. நீரும், நெருப்பும் சேரா. சேர்ந்தால் ஒன்று மற்றதை அளிக்கும். ஆனால் அதற்கடுத்த கட்டத்தில் அவை சேரும் முழுமையுண்டு. அது நமக்கு நீரிலும், நெருப்பிலும் தெரிவதில்லை. ஆனால் இல்லறத்திலும், துறவறத்திலும் தெரிய முடியும். இவை வாழ்வில் எதிரிகள். அந்த வாழ்வு மனிதன் அறிந்த வாழ்வு.



இறைவன் ஏற்படுத்திய வாழ்வில் இல்லறமும், துறவறமும் பகுதிகள். ஏனெனில் சமூகம் என்பதே இறைவன் ஏற்படுத்திய வாழ்வின் பகுதி. இல்லறம் சமூகத்தின் பகுதி. துறவறமும் அதன் பகுதியே. அவை சேருவது எப்படி? துறவறம் தூய்மையானது. இல்லறம் ஆசைகளுக்குட்பட்டது. ஆசைகளுக்கு அப்பாற்பட்ட இல்லறத்தை துறவறத்தின் தூய்மையுடன் நடத்தினால் நிலை உயரும். உயர்ந்து முழுமையை அடையும். அம்முழுமைக்கு உண்மையுண்டு. பகுதியில் அவ்வுண்மையில்லை.

மேல்நாட்டார் விஞ்ஞானத்தை வளர்த்தனர். வசதி ஆயிரம் மடங்கு பெருகியது. வாழும் இடம் சொர்க்கமாயிற்று. 30 ஆண்டுகளாயின. குற்றம், வன்முறை, மனத்தில் வெறுப்பு, வெற்றிடம் தோன்றியது. வசதி என்பது பகுதி. மனம் என்பது பகுதி. ஓர் பகுதியைப் பாராட்டியதில் அடுத்த பகுதி குறையாகிறது.

மனதில் வெற்றிடமில்லாமல் நிறைவு ஏற்படும் வசதியுண்டா? அவ்வசதிக்கு முழுமையுண்டு. நாம் வசதியை எப்படி தேடுகிறோம்? சுயநலமாகத் தேடுகிறோம். விஞ்ஞானி ஒன்றைக் கண்டுபிடித்தால், அது அவருக்கே சொந்தம். இது சுயநலம், இன்று ஏற்பட்ட வசதிகளின் அடிப்படை சுயநலம். சுயநலம் பகுதி. அதனால் அதில் உண்மையில்லை. நாம் பெறும் படிப்பு பகுதி. அறிவு மட்டும் வளரும் படிப்பு நாம் பெறுவது. மனமும், உணர்வும், குணமும் மற்ற பகுதிகள். அவைகளும் வளரும் படிப்புக்கு முழுமையுண்டு.

5000 ஆண்டுகட்கு மனிதனுக்கு உணர்ச்சி தெரியாது, அறிவு கிடையாது. உடலை மட்டும் பேணினான். நெடுநாள் வாழ்ந்தான். இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். இன்று அதுபோல் வாழும் மனிதனில்லை. இருந்தால் அவனை விலங்கு என்போம். உடல் பகுதி. முழுமையில்லை. இன்றைய மனிதனை ஆதிமனிதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அவன் பகுதி, நாம் முழுமை. எதிர்காலத்தில் வரும்

மனிதனைக் கருதினால் நாம் பகுதி, அவன் முழுமை.

இனிமையாகப் பழகினால் உயர்ந்தது. கெட்ட செய்தியையும் நல்ல சொற்களில் சொல்வது king's maanners அரணுடைய பழக்கம். ஆனால் பழக்கம் வாழ்வில் ஓர் பகுதி. 25ம் வயதில் வாழ்க்கையை பட்டம் முடித்து ஆரம்பித்த இளைஞரின் ஒரு லட்சியம் ஒரே இலட்சியமானால் அது அவர் வாழ்வை நடத்துகிறது. 20 ஆண்டுக்குப் பின் தன் வாழ்வில் கணக்குப் போட்டுப் பார்த்தார். தன்னை ஒத்தவர்கள் பலரை நினைத்துப் பார்த்தார். அனைவரும் குடும்பத்துடன் வாழ்கின்றனர். எவர் கையிலும் 1 கோடிக்குள் குறையாமல் பணமிருக்கிறது. தன்னை நினைத்துப் பார்த்தார். நிலத்தில் வேலை செய்தேன். கூலிகள் இனிக்கப் பழகினேன், பாக்டரியை நிர்வாகம் செய்தேன். ஆட்கள் இனிக்கப் பழகினேன் பெரிய தொழிலதிபர்கள் பழகினேன். அனைவரும் என்னை விரும்பினர். இன்று அந்த கூலிகள் சொந்த நிலம் வைத்து இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகள் குடும்பத்துடன் வாழ்கின்றனர். அத்தொழிலதிபர்கள் கோடிக்கணக்கில் சம்பாதித்தனர். நான் எதை சாதித்தேன்? குடும்பம் உண்டா? இல்லை. பணம் சேர்த்தேனா? இல்லை. பிறகு எதைச் சாதித்தேன்? தெரியவில்லை. ஏன் சாதிக்கவில்லை? என்ற கேள்வியை எழுப்பினார். பதிலில்லை. அவருக்குரிய பதில் உண்டு. இனிய பழக்கம் உயர்ந்தது. ஆனால் பகுதி. பகுதியில் உண்மையில்லை. அது வாழ்வின் பகுதி. வாழ்வு முழுமையானது. அதற்கு உண்மையுண்டு. கூலிகளும், தொழிலாளிகளும், தொழிலதிபர்களும் வாழ்வை நாடினார்கள், சாதித்தார்கள். நான் பகுதியை முழுமை என நினைத்தேன். சாதிக்கவில்லை. தன்னை மட்டும் கருதும் பகுதியை நாடுகிறார். குடும்பம் முழுமை. கல்லூரியில் விளையாடடு, படிப்பு, டிகிரி, ஆகியவை பகுதி. மனிதன் முழுமை முதல் ராங்க் வாங்குபவனை தன் சுபாவத்தையும் தன் வாழ்வையும் முக்கியமாகக் கருதிய



மாணவர்கள் வாழ்வில் அதிகமாக சாதிப்பதைக் காணலாம். வாழ்வு முழுமையுடையது. மற்றவை பகுதி.

பகுதியை முழுமை எனக் கருதி அட்டகாசம் செய்பவர்கள் அதிக நாள் உயரத்திலிருப்பதில்லை. பெரிய ஸ்தாபனத்தில் புதியதாக சேர்ந்த இளைஞர் ஸ்தாபன சேவையைக் கருதினார். ஸ்தாபன தலைவர் நிலைக்கு ஓராண்டில் உயர்ந்தார். வேறொரு உலகப் பிரசித்தி பெற்ற ஸ்தாபனத்தில் மேல்மட்டத்திலுள்ளவர்கள் தன் சொந்தப் பலனை மட்டும் கருதினார். 5 ஆண்டுகளில் அப்பதவி போயிற்று. ஸ்தாபனத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

முழுமையைக் கருதுபவர்கள் விவரம் புரியாமல் முழுமையைத் தலைமையில் காண்பார்கள். தலைமைக்கு வால் பிடிப்பார்கள்.

அன்னையை அறிந்தவர் ஒருவர் வாழ்வே அற்புதமாயிருக்கிறது என்று அன்னையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். மனம் மாறி மகிழ்வின் உறைவிடமாயிற்று. உடன் பிறந்தவர் வாழ்வின் சிறுமைகள் கண்டு பதறினார். அவை விலகின. அவரும் அன்னைக்குரியரானார். அடுத்து அடுத்து குடும்பத்தில் பலரும் அன்னையை ஏற்றுக் கொண்டனர். இதுவரை காணாத நல்ல சிறு செயல்கள் ஆயிரமாயிரம் நிகழ்ந்தன. அன்னையைப் பற்றி தான் கேட்டது, படித்தது, அறிந்தது அத்தனையும் உண்மை என்று கண்டார்.

ஆனால் தான் கண்ட உண்மைகள் அனைத்தும் பகுதியின் உண்மைகள் என அறியவில்லை. முழுமை எது எனவும் அவர் அறிந்து கொள்ள முயலவில்லை. அடுத்த முறை ஆசிரமம் வரவேண்டியிருந்தது. ஆசிரமத்தைச் சார்ந்த ஒருவருக்குப் போகும் பொருள் ஒன்று அவருக்காகக் காத்திருந்தது. இவரிடம் கொண்டு வந்து கொடுத்து ஆசிரமம் போகும் பொழுது அங்கே இதை உடையவரிடம் சேர்த்துவிடுங்கள் என்றார்கள். சற்று யோசனை செய்தார். அவரை நானுள்ள இடத்தில் வந்து எடுத்துப் போகச்

சொல்லுங்கள் என்றார். அவர் முழுமையில் உள்ளவர், இவர் பகுதி என்றறியாமல் பேசினார். ஆசிரமத்தில் அவர் வந்து தனக்குரிய பொருளை எடுத்துச் சென்றார்.

கொஞ்ச நாளாயிற்று. இவர் ஊரில் தியான மையம் இடம் மாற வேண்டிய நேரம். இவரைப் பொறுப்பேற்கச் சொன்னார்கள். ஏற்றார். அதில் ஓர் கேள்வி. கேள்வி எழுந்த நேரம் இவர் மனம் பேசியது, அன்று முழுமையை நான் ஏற்காமல் என்னை நாடி வரச் சொன்னேன். இன்று முழுமை என்னிடம் வந்தபின், கேள்வி எழுகிறது. இயல்பு தானே என்றது.

உண்மை பகுதியில் இல்லை, முழுமையிலிருக்கின்றது.

❉ ❉ ❉

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சிலசமயங்களில் அன்னை ஆத்மாவின் பலனுக்காக அதன் குறைகள் மூலமே செயல்பட முடிகிறது.

*குறை மூலம் நிறைவு தருவதும் அன்னை செயல்.*

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12 First Cross Extension, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## அமெரிக்காவைத் தாக்கினர்

பயங்கரவாதிகள் அமெரிக்காவில் 120 மாடிக் கட்டிடத்தைத் தாக்கியதில் ஆயிரக்கணக்கான பேர் உயிரிழந்தனர். இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்றுள்ளவர் குடும்பங்கள் தங்கள் மக்கள் என்ன ஆனார்கள் என்று பதை பதைத்தனர். ஆபத்து பொது. தப்பிப்பது அதிர்ஷ்டம்.

நாங்கள் பத்திரமாக இருக்கிறோம் என்ற செய்தி வரும்வரை குடும்பத்தாருக்கு நிலையில்லை. அப்படித் தாக்கப்பட்ட இடங்கள் இரண்டு, நியூயார்க்கில் ஒன்று, வாஷிங்டனில் Pentagon என்று இராணுவத் தலைமை நிலையம்.

அன்பர் ஒருவருடைய மகன் வாஷிங்டனிலிருக்கிறார். அவர் ஆபீஸ் Pentagonக்கு 500 அடி தூரத்திலிருக்கிறது. அவர் தன்னூருக்கு போன் கிடைக்கவில்லை என்பதால் சென்னைக்கு செய்தி சொல்லி வீட்டுக்கு அறிவித்தார். மகன் பத்திரமாக இருப்பது பெற்றோருக்குத் தெரிய வந்தது.

சான்பிரான்ஸிஸ்கோவில் ஒரு அன்பர். அவருக்கு (neighbours) உடன் உறைபவர்கள் 3, 4 பேர் வாஷிங்டனில் வேலை செய்கிறார்கள். இவர்கள் அன்பரில்லை. 3 பேரிடமிருந்தும் அன்பருக்கு போன் வந்தது. ஏதோ காரணங்களுக்காக இவர்கள் அன்று ஆபீசுக்குப் போகவில்லை.

**கேட்டாலும், கேட்காவிட்டாலும், தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் தொடர்புள்ளவர்க்குப் பாதுகாப்புண்டு.**

## ஜலதோஷம்

எகிப்து மன்னன் சாலமன் எறும்பு, நாய் இவற்றின் பாஷையை அறிவார். அன்னை தென்னை மட்டை, கம்பளம், கழுதைக் குட்டிகளுடன் பேசுவார். ரோஜா மலர் அவரிடம் கோபித்துக் கொள்ளும் நிகழ்ச்சிகள் அன்பர்கள் அறிந்தவை.

வாரம் தோறும் தியானம் நடக்கும் வீடு. மூன்றாம் ஞாயிறு சிறப்பான தியானம். அன்று சிம்பல் போட ஒரு பிளாஸ்டிக் ஷீட்டில் சிம்பல் போட்டு அதைப் பயன்படுத்துவார்கள். அடியில் ஷீட்டில் சிம்பலிருந்தால், புஷ்பம் அடுக்க வசதியாக இருக்கும். ஒரு தியானம் முடிந்தவுடன், ஷீட்டை அலம்பி காய வைப்பது வழக்கம். அடுத்த முறை, தேவைப்படும் பொழுது ஷீட் காணவில்லை. அவ்வீட்டுப் பெண் மணிக்கு அதிக ஜலதோஷம் அதை ஒட்டிய தொந்தரவுகளால் எதையும் கவனிக்க முடியவில்லை. ஷீட்டை கண்டுபிடிக்க தியானம் செய்தார். “கிணற்றில் பார்” என்ற குரல் கேட்டது. மதிய நேரம். 10 அடி தண்ணீர் உள்ளது. ஷீட் கிணற்றில் இருக்கிறது. பாதாள சுரடு மூலம் எடுத்தனர்.

இத்தனை நாள் வாட்டிய ஜலதோஷம், நிற்காமல் நீர் வடிந்த மூக்கு, திடீரென மறைந்துவிட்டது. பல நாளாக உடல் வலி தாங்க முடியாத பையனுக்கும் வலி திடீரென நின்றுவிட்டது.

- **ஷீட் ஜடப் பொருள். பக்தியுள்ள குடும்பத்தில் ஷீட்டிற்கும் உயிர் வந்துவிட்டது. பக்தியும் வந்தது போலும், கவனம் குறைந்தவுடன் தொலைந்துவிட்டது.**
- **ஷீட் கிணற்றில் விழுந்ததால் ஷீட்டிற்கு ஜலதோஷம் வந்துவிட்டது.**
- **அது அவ்வீட்டுப் பெண்மணியின் ஜலதோஷமாயிற்று.**